[illegible]

மலர் 17 இதழ் 5

3L
[illegible]
N127.7.5
15E2E9

1642 No. M. 916.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை

அக்ஷயவருஷ - மாசிமீ

21 MAR 1927

ஸம்புடம் 17.] [ஸஞ்சிகை 5

பத்ராதிபர்:— ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

விஷய ஸூசிகை

1.	சமயம்:—ஸ்ரீ. திரு. அ. இராமகிருஷ்ணசடகோப தாஸர்	145
2.	வால்மீகியும் கம்பரும்:—ஸ்ரீ. வி. ர. குப்புஸாமி ஐயங்கார்	150
3.	ஸ்த்ரீகளின் ஆஹ்நிகம்:—ஸ்ரீ. பார்த்தஸாரதி ஐயங்கார்	157
4.	கடிதங்கள்:—	163
5.	புஸ்தக விமர்சம்:—	167
6.	பத்ராதிபரின் குறிப்புகள்.	171
7.	ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர். ...	25
8.	ஸ்ரீஸ்தோத்ர ரத்நம்:—	25

FEBRUARY 1927.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

ஸ்ரீ:

1927-ம் வருஷம் ஜனவரிமீ 21௳ முதல் ஷை வருஷம் பிப்ரவரிமீ 22௳ வரையிலுள்ள ஸ்ரீ. வை. ஸி. சபைச்

சந்தாவரவு.

	முன் வரவு ரூபா.		206	12	0
1.	ஸ்ரீ. உ. வே	எஸ். வெங்கடேச அய்யங்கார் ராமனுதபுரம்	3	0	0
2.	,,	கே. சடகோப அய்யங்கார் கும்பகோணம்	1	8	0
3.	,,	ஈ. கே. அனந்த சர்மா எழும்பூர்	3	0	0
4.	,,	கோதண்டராம ஐயங்கார் கும்பகோணம்	3	0	0
5.	,,	ஆர். திருவேங்கடத்தய்யங்கார் நாகபட்டணம்	3	0	0
6.	,,	ஜி. கிருஷ்ணசாமி அய்யங்கார் கும்பகோணம்	3	0	0
7.	,,	எம். கே. கிருஷ்ணமாச்சாரியார் பெங்களூர்	1	8	0
8.	,,	கூளக்குடி சுந்தரராஜய்யங்கார் தேவகோட்டை	3	0	0
9.	,,	ராமசுவாமி ரெட்டியார் பனமரத்துப்பட்டி	3	0	0
10.	,,	சக்கரவர்த்தி ஆச்சாரியார் பறங்கிமலை	3	0	0
11.	,,	அருங்காஹூர் கெ. சுத்தரராஜய்யங்கார் தேவகோட்டை	3	0	0
12.	,,	எஸ். சக்கரபாணி அய்யங்கார் நத்தம்	3	0	0
13.	,,	எல். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் கம்பம்	3	0	0
14.	,,	டி. பார்த்தசாரதி அய்யங்கார் கூடலூர்	3	0	0
15.	,,	என். நாராயணய்யங்கார் கொண்டனூர்	3	0	0
16.	,,	கெ. வி. வெங்கடாச்சாரியார் நாமக்கல்	5	0	0
17.	,,	பாபநாசம் ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் மோகனூர்	3	0	0
18.	,,	ஆர். கோவிந்தய்யங்கார் மோகனூர்	3	0	0
19.	,,	பி. கே. ரெங்கசாமி அய்யங்கார் மோகனூர்	3	0	0
20.	,,	கே. வி. குப்புசாமி அய்யங்கார் நாமக்கல்	3	0	0
21.	,,	டி. நரசிம்ம ராகவய்யங்கார் சைதாப்பேட்டை	3	0	0
22.	,,	டி. சாரங்கபாணி அய்யங்கார் மைலாப்பூர்	3	0	0
23.	,,	ஜி. கோவிந்தசாமி பிள்ளை தஞ்சாவூர்	3	0	0
24.	,,	வி. ஸ்ரீநிவாஸாச்சாரியார் மதரூஸ்	2	0	0
25.	,,	எ. ஸ்ரீநிவாஸாச்சாரி மதரூஸ்	2	0	0
26.	,,	என். எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் நாமக்கல்	3	2	0
27.	மகா-ள-ள-ஸ்ரீ	தம்பால் அவர்கள் நந்திதுர்க்கம் சுரங்கம்	2	10	0
28.	ஸ்ரீ. உ. வே.	வி. எஸ். நரசிம்மாசாரியார் கிருஷ்ணகிரி	3	2	0
29.	,,	சா. மு. தெய்வநாயக ரெட்டியார் மேலபட்டாம்பாக்கம்	3	0	0

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] அக்ஷய வருஷம், மாசிமீ [ஸஞ்சிகை 5

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரளககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மே(அ)நவத்யா ॥
[ஸ்ரீபாகவதம், 1-9-23.]

ஸ்ரீ:

சமயம்.

முதற்பகுதி-வைணவ சமயப் பொதுநிலை யாராய்ச்சி.

(ஸ்ரீ. திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்)

(முன் தொடர்ச்சி - ஸம்புடம் 16, பக்கம் 204.)

இத்துணையுங் கூறியவாற்றான் உணர்ந்தது யாதென்னில்: உலகம் நடத்தற்பொருட்டும் இறைவன தண்மையியல்பை உணர்ந்து அவனை அடைதற்கும் ஆன உயர்மணி மெய்ம்மொழிகள் பண்டைய சான்றோர்களா லோதப்பட்டும் முன்னோர்களால் போற்றப்பட்டும் வரவே, அம்மெய்ம்மொழிகளினின்றும் போந்த நெறிகள் தத்துவங்கள் இவை யாகிய வெவ்வேறு பாடுகளொவ்வொன்றில் நின்றொழுகிய பெரியோரும், அப்பெரியோர்தம் சமயமும், அச்சமயத்திலே வயங்கிய மக்களும், வேறு வேறு இயல்பினராய்க் காணப்படுவாராயின ரென்பதே. எனவே சமயம் இன்ன தென்பதையும், அஃது ஒவ்வொருவருடைய கருத்துவேறுபாடு தோன்றப் பலவாதலையும் அவ்வச் சமயநெறி நிற்பார் பகுப்பு பலவாதலையும் உணர்ந்தாம்.

இனிச் சமயம் என்பதின் உட்பொருளைப் பொதுவாக ஆராயுமிடத்து, அஃது, அண்ட சுழற்சிகளை இயக்கவல்ல ஐம்பூத |வியற்கைக்கு மேற்பட்ட

18629

தான மிகு விரகசிய சூக்கும தத்துவ முழுமுதற் பொருளாகிய ஒரு பேரிறைவனுடைய ஆற்றலில் உண்மையான நம்பிக்கையும், அந்நம்பிக்கைப்படி நடப்பதாய நெறியும், அந்நெறிப்படி யொழுகும் ஒழுக்கமும், அவ்வொழுக்கத்தின்படி கோடற்பாலனவாகிய *அருளும் அன்பும் அறனும் பெற்று, அவ்விறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவனை அடைவதற்கு விழையும் ஒழுகலாறுடைய ஒரு மனிதன்றன் கட்டாய கடமையுமா மென்றும், சிறப்பாக நோக்குமிடத்து இறைவனையும், அவனை உணர்ந்தடையும் ஆறுகளையும், ஐயந் திரிபு அறியாமைகளை அறுத்துத் தெளிவுற அறிவிக்கும் முறையும், அம்முறையிற் பயின்று போந்த பெரியோர் ஆணையும், அவ்வாணை கடவா தொருவன் ஒழுகிநிற்கும் நிலையுமா மென்றும் பொருள்படு மென்க. எனவே இறைவன தியல்புகளைச் செவ்வனம் யார் முறைபிறழா துரைத்து விளக்குகின்றாரோ, அவர்தம் உரையே முற்றவுங் கோடற்பாலதென வறிக.

இனி ஆதியில் ஆசியா கண்டத்து வடமேற்கில் இன்ன சமயத்தினர், இன்ன மொழியினர், என்று தெளிவாக வகுத்துக் கூறற் கியலாத மனிதர்கள் நாளேற வேறத் தம்முள் வேறுபட்டுப் பிரிந்து சிலர் ஐரோப்பா கண்டப் பக்கத்தும், சிலர் இந்தியா பக்கத்தும் வந்தார்களென்று உலக பழைய சரித வாராய்ச்சிகளால் புலனாகின்றது.† அவ்வாறு இந்தியாவுள் நுழைந்தோர் பாஞ்சால தேயத்தில் குடிபுகுந்து, பின்னர் கங்கைக் கரையை அடுத்து வாழ்ந்தார்களென்றும், அப்போது தான் வேதம் முதலிய எழுதப்பட்டன வென்றும், உண்மை நிலை இது வாதலைக் கண்டறியாதவன்னோர், தாஞ் செய்த சிறுசிறு செய்கைகளையே துதியாக எழுதிவைத்தனராக, அது கண்டு அறிவிற் சிறந்து வயங்கிய மூதறிஞர்கள் அவ்வேதங்களின் ஸாரமாகிய உபநிடதங்களை இயற்றினா ரென்றும், அவருட் பழுதிலாப் பேரறிவுடையோர் புராணேதிகாசங்களை வகுத்துப் பின்பு எல்லா நூற்களின் சாரமானதும் எச்சமயத்தோர்க்கும் பொதுவானதுமான **வேதாந்த சூத்திர** மென்னும் பெயரிய அரிய பெரிய நூலொன்றினை **வேத வியாதர்** அருளிப் போந்தார் என்றும், சூத்திர காலத்துக்குப் பின்வந்த மகான்கள் அதற்குப் பாடிய உரைகள் பல வெழுதிவைத்தா ரென்றுங் கூறுப.‡

இனியொரு சாரார், ஆரியர் குடிபுகு முன் இவ்விந்தியாவில் தொன்று தொட்டே தமிழ ரென்போர் வதிந்துவந்தா ரென்றும், அன்னோர் ஒரே மன

1. * ஈண்டு,........................யாது மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பா
லருளு மன்பு மறனும் மூன்றும்'..
என்ற பரிபாடலெந்தாம் பாட்டீற்றடிகளும் பரிமேலழக ருரையும் நோக்குக.

† Vide V. Smith's 'Early History of India'.
‡ Refer to Krishnasami Ayyangar's Ancient India'.

முடையோராய் ஒரு பொது தெய்வத்தையே போற்றிவந்தா ரென்றும், அவர்களுள் அறிவின் மிக்கார் தொல்காப்பிய முதலிய பலப்பல நூல்கள் செய்தா ரென்றும், அந்நூல்களும் மற்று வேறுவகை நூற்களும் பல்கி வளனும், பொலிவும் அழகும் அடையுமாறு† முத லிடை கடைச் சங்கங்க ளென்னும் முச்சங்கங்களை நிறீஇயினா ரென்றும், அவரது வள்ளற்றன்மையையும், அருட்டன்மையையும் நாகரிக முதிர்ச்சியினையும் கண்டன்றே வடபாலிருந்து வந்த ஆரியர் அவருடன் (இத்தமிழருடன்) ஒன்றுசேர்ந்து எண்ணம் அறிவு முதலான வற்றில் ஒற்றுமை உடையோராய் வாழ வொருப்பட்டா ரென்றும், அங்ஙனம் வாழ்தரு நாட்களில் தத்தங் கருத்து வேறுபடவே, வேறுபட்ட அவரவர் கருத்துக் கிணங்குமாறு சமய வேற்றுமைகளைப் புதிது செய்தன ரென்றும், அவ்வேறுபாடும் சமய வுணர்ச்சியும் தோன்ற ஆகமம் திருமந்திரம் சிவஞானபோதம் சிவஞானசித்தி தேவார திருவாசகங்கள் முதலிய நூல்களை வகுத்தன ரென்றும் மொழிப.‡ இது எத்துணை உண்மையோ அதனை அறிதற்குக் கடினமேனும் ஒருவகையான் உணர்தற்குப் பிறிதோர் ஆராய்ச்சிக்கட் கூறுவாம். ஆகமம் திருமந்திரம் முதலியவை தோன்றிய காரணத்தைச் சற்றுக் கூர்ந்தாராயுங்கால், ஆரியருடைய வேதமொழிகள் உபநிடதங்கள் பிரமசூத்திரங்களாதிய நூற்களிற் சிறப்பான விடங்களில் எல்லாம் நாராயண சப்த வாச்சியமே பெரிதும் பிரதிபாதிக்கப்படுகின்றமையின், அவை வைணவ மதத்திற்குப் பெருந்துணையாதல் பற்றிச் சைவச் சான்றோர்கள் அவற்றிற்கு எதிரிடையாக இந்நூல்களை எழுதினர்போலு மென ஐயுறக் கிடக்கின்றது. அது கிடக்க.

இனித் திருவாளர் P. T. சீனிவாச அய்யங்கார் என்பவர் தமது "Did the Dravidians obtain their culture from the Aryan Immigrants?' * என்ற கட்டுரைக்கண், ஆரியரது பழைய விருப்பிடத்தின் ஞாபகச் சின்னமாதல், இந்தியாவைத் தாக்கினார் என்ற குறிப்புகளாதல், வேதமொழிகளிற் பெறப்படுதல் இன்மையின், அன்னார் இந்தியாவுட் புக்கார் என்பது இல்லை யென்று கூறு மாற்றானும் இன்னும் இஃதொன்றை இந்திய சரித வாராய்ச்சி எழுதுவோர் தத்தமக்குத் தோன்றியவாறே எழுது மாற்றானும் பண்டைய காலத் திந்தியாவின் வரலாற்று முறைகளையும் இந்தியாவுக் கென்றேற்பட்டுலவும் மற்றைய சரித்திர வாராய்ச்சிகளிற் பெரும்பாலனவற்றையும் ஆய்ந்தாலும், பண்டைய வொழுக்கத் தன்மை சிறிதுதான் புலப்படுகின்ற

†Vide Krishnasami Ayyangar's 'Beginnings of The South Indian History Refer Admixture of the Aryans with the Tamilian's' in the Tamilian Antiquery.

‡ சுவாமி வேதாசலம் அவர்களுடைய பண்டைக் காலத்துத் தமிழரும் ஆரியரும் என்னு நூலைக் காண்க.

* St. Joseph's College Magazine, December 1914, Page 148.

தாதலால் சரித்திர வாராய்ச்சிக்காரர் கூறுவனவெல்லாம் முழுமையும் உண்மை யென்றே கோடல் ஆகாது. எது எவ்வாறாயினும் ஆகுக. மிகப் பழைய காலந்தொட்டே இவ்விந்தியாவின்கண் அறிவாற் பெரியராய முதுமக்கள் பலர் இருந்தாரென்பதூஉம், அவருட் சிலர் இறைவனை நேரிற் காணும் பேற்றி வாய்க்கப்பெற்றவரென்பதூஉம், அவ்விறைவன் திருவருளால் அரியபெரிய சீரிய நூல்கள் பல வியற்றினரென்பதூஉம் மறுக்கலாகா உண்மையே. லார்டு ஆக்டன் என்பார் கூறுமாறு ஒவ்வொன்றிற்கும் முரண்பட்டனவும், வழூஉக்களும் கட்டுக்களும் பொய்யும் புளுகுகளும் நிறைந்து தோன்றுவனவுமான பலவகைப்பட்ட நூல்களைத் துருவி உண்மை காண்டலே பாண்டித்தியத்தின் நிறைவும் அழகும் ஆம் ஆகலின், நாம் எது மொழியினும் எதெழுதினும் பொய்யும் புளுகுமற்று, ஒவ்வொன்றினையும் துருவிப் பார்த்தே உண்மை கூறக் கடமைப்பட்டுளே மென்க. எனவே மிகக் கூர்ந்து ஆராயுங்கால், இவ்விந்தியாவில் ஆரியம் என்னும் **வடமொழியும்**, தமிழ் என்னும் **தென்மொழியும்**, தமக்குத்தாமே சமத்துவமுடையனவாய் மிக்க அழகியவாய்த் தோன்றலின், மேதாவிகள் எல்லாம் தத்தங் கொள்கைகட்கிணங்கும் பலவகை நூல்களை இவ்விருமொழிகளிலே மிகப் பழைய காலத்தே செய்தனராக, அவைதம்மைக் கற்றுணர்ந்து திருவருள் விலாசப் பெருவெளியில் ஈடுபட்ட அறிவு மதுகையுள்ள சான்றோர்கள் இறைவன்மேல் அன்பு மீதூர, அவ்வன்பு மேலீட்டால் செவிக்கினிய செஞ்சொற்களாலமைந்த பாடல் பல பாட, இங்ஙனமெழுதிய பாடிய வெல்லாவற்றையும், இறைவனது தத்துவ இலக்கணங்களையும் வெவ்வேறு வகையாய்ப் பின்வந்தோர் கிளந்தோதவே, பலப்பல சமய பேதங்கள் இந்து சமயம் என்னும் பொதுச் சமயத்தில் அகமாகவும் புறமாகவும் தோன்றின.

இனிப் பண்டைக் காலத்தே உலகச் சமயங்களெல்லாம் தாந்தாங் கூறுமவையே உண்மையாமென்று போந்தன. எல்லாச் சமயங்களும் இறைவன் அருளினாலே தோன்றியவை என்றாலும், அவற்றுள் எது இறைவனதுண்மை இயல்புகளை[1] விளக்குகின்றதோ[*] அதுவே உண்மையென்றேற்புக் கொள்ளப்படுமென்றறிக. அறியவே, ஒவ்வொன்றையும் துருவிப் பார்த்து உண்மை காண்டற் சாலவும் வியனுடைத்தென்றவ்வாறாய நுணுக்கத்துட்டலைப்படுவோம். என்றால், ஓரோவிடத்தொருவன் இருப்பானாயின், அவன் அறிவு அசைந்து விளக்கமுறுதவாறு போல, ஒன்றின்கண் உறைந்து நிற்போன் விரிவான அறிவு பெற்று உண்மை காணானாதலின், அவனுடைய அறிவு அசைந்து மேன்மேலும் விளக்கம் பெற்றிட வேண்டியே சமயங்கள் பல தோன்றினவாகலானும், ஒவ்வொரு சமயத்தின் கருத்தினைத் திறம்பட வாராயும் தனது அறிவின் அசைவால் அவன் தன்னிடையே உண்மை கண்டு விளக்க

* Study of History, Page 40.

*1. இவற்றின் விரிவெல்லாம் அடுத்த பகுதியுட் கூறுதும்

முறுகின்றானாகலானும், இங்ஙனமே முன்னைய பெரியாரெல்லாம் உண்மைநெறிக்கு மிகு பாடுபட்டினுற்றான் தூய அறிவு பெற்றுத் திகழ்ந்தனராகலானும், என்பது அற்றேல் பண்டைய மக்கள் தம்முண் முதறிவுடையோர் உண்மைநெறியொன்று கண்டு அதனையே வற்புறுத்திக் கூறுநிற்க நாமதனைத் துருவிப்பார்த்தல் முறைதானோ என்னில்? முறைதானே. என்னை? பண்டைய பெரியோர்கள் ஆய்ந்தோதியவற்றில் இறைவனதிலக்கணங்களை உண்மையாகவும் பொருத்தமாகவுங் கூறுவன எவையோ, அவையே தாம் நம்மனோரால் தழுவப்பாலன வென்று மேலே காட்டினோமாதலின் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிறர் எல்லாங் கூறுவன யாவும் உண்மையென்றவ்வழியே நிற்றல் சாலும் எனக் கோடல் ஆகாது என்பது.

இங்ஙனம் மக்கள் உணர்வு மேன்மேலும் கிளர்ச்சியுற்று உயரிய உண்மைநிலைக்கு வருதற்பொருட்டுண்டாய சமயவேற்பாடு கிறித்தானியம் மகமதீயம் முதலிய புறநாட்டுச் சமயங்கள் மூலமாயும், இந்து அகப் புறச் சமயங்கள் மூலமாயும், பலவகையாய்த் தெரிக்கப்படினும், இந்துசமயத்துட் பெறப்படுகின்ற அகப் புறச் சமயங்களில் எது வைதிக சமயம் என்னப்படுமோ அதுதான் சிறப்புடைத்து. எனவே, உலகம் உயிர் இறைவன் என்னு முப்பொருள் உண்மையையும் அவற்றின் தத்துவங்களையும் நன்காராயும் சமயம் எதுவோ, அது வேத வேதாந்த சூத்திரப் பெருவுரைகளில் நுனித்தறியத்தகும் முழுமுதற் பொருளைத் திறம்பட வோதிச் செவ்வியதொரு முறைக்குக் கொணர்ந்து, உயிரைத் தூய்மையாக்கி இறைவனடி சேர்ப்பிக்கும் அரிய கோட்பாடமையப்பெற்றதாகலின், அதுதான் வைதிக சமயம் என்னப்படுமென்றுணர்க. இப்பெற்றியமையாது தோன்றிய சமயங்கள் எல்லாம் அவைதிக சமயங்களென்க. எனவே கிறிஸ்து பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டு முன்னும், பிறந்த நான்கு நூற்றாண்டு காறும், மிகவும் தலையெடுத்தாடிய புத்த சமண சமயங்களும் ஏனைய புறநாட்டுச் சமயங்களும் எம்மனோரால் போற்றத் தக்கவையன்றென்றொழிக.

அற்றேல் புத்த சமண சமயங்கள், அன்பு அருள் இரக்கமாதிய நல்லொழுக்கங்களைக் கிளந்தெடுத்தோதுகின்றனவாக, அவை தம்மையும் வைதிக சமயங்களென்னுமோவெனில், என்னும். என்னை? அவை கூறு நல்லொழுக்கங்கள் எல்லாம் நுணுகி ஆராயுங்கால், வைதிக சமயத்துட் பெறப்படுகின்றனவாயானும், வைதிக சமயத்துட் கூறப்படாத வத்துணைச் சிறந்த தத்துவ உண்மைகளை, அவை போதுகின்றில வாகலானும், அன்ன பிறவாற்றானும் அவை வைதிக சமயத்தின் பாற்படா வென்பது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

வால்மீகியும் கம்பரும்.

(ஸ்ரீ. உப. வே. வி. ர. குப்புஸாமி ஐயங்கார்.)

(தொடர்ச்சி - ஸம்புடம் 16, பக்கம் 208.)

வால்மீகி ராமாயணத்திற்கும் கம்ப ராமாயணத்திற்கும் கதையிலும் வர்ணனைகளிலும் சில இடங்களில் வால்மீகரைத் தழுவியும் சில இடங்களில் மாறியும் பேதம் உண்டாகி இருக்கிறது. அவைகளை என்னால் கூடியமட்டும் இதில் எடுத்துக் காட்ட முயலுகிறேன்.

வால்மீகி, ராமாயணத்தை ஆரம்பித்த விதம்.

ஸப்த ரிஷிகளால் அனுக்கிரகிக்கப்பட்டவரும், ஜீவகாருண்யம் ஞானம் இவைகளை உடையவருமான வால்மீகர், நாரத முனிவரால் ராம சரித்திரத்தை உபதேசிக்கப் பெற்றும், பிரம்மாவினால் அனுக்கிரகிக்கப்பட்டும், எப்பொழுதும் அதே தியானமாக இருக்கும்போது ஒரு நாள் தமஸா நதிக் கரைக்கு அனுஷ்டானத்திற்காகச் சென்றார். அந்நதியின் ஓரத்தில் ஓர் மரத்தில் உட்கார்ந்து கொண்டு இருந்ததும் காமத்தை அடைந்ததுமான க்ரௌஞ்ச (அன்றில்) பக்ஷிகளில் ஆண்பக்ஷியை ஓர் வேடன் அம்பு எய்து கொன்றுவிட்டான். அப்பொழுது பெண்பக்ஷி மிகவும் துக்கத்துடன் கூச்சலிட்டது. இதைக் கண்ணுற்ற வால்மீகர் அந்த வேடனைப் பார்த்துச் சில குரூரமான வார்த்தைகளைச் சொன்னார். அதுவே சுலோகமாய் அமைந்தது. அதாவது:—

“𑌮𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌗𑌮𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌃 𑌸𑌮𑌾𑌃 ।
𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑍁𑌨𑌾𑌦𑍇𑌕𑌮𑌵𑌧𑍀𑌃 𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌂”

(இதன் பொருள்) [ஏ வேடா! க்ரௌஞ்ச பக்ஷிகளின் சேர்க்கையில் காமத்தால் மோஹித்திருந்த ஆண் பறவையை நீ கொன்றுவிட்டாய். ஆகலால் என்றும் நிலைத்துள்ள பதவியை நீ அடையமாட்டாய்.]

பிறகு நாரதமஹரிஷியின் அனுக்கிரஹப்படி இதுவே ராமாயணத்திற்கு ஆரம்பமாகிவிட்டது.

கம்பர், ராமாயணத்தை ஆரம்பித்த விதம்.

கம்பரை ஆதரித்துவந்த திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல், வடமொழியிலுள்ள ராமாயணத்தைத் தென்மொழியில் யாவரும் தெரிந்து கொள்ளும்படி செய்துகொடுக்க வேண்டிக்கொண்டனர். அதற்குக் கம்பர் உடன்பட்டும் காவியத்தைச் சீக்கிரம் செய்யாமல் தாமதித்தபடியால், சடை

யப்ப வள்ளல் சோழராஜனிடம் சென்று இவ்விஷயத்தைத் தெரிவித்தார். அப்பொழுது அரசன் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் சேர்த்து ராமாயணத்தைப் பாடும்படி செய்தான். ஆகவே, கம்பர் ஒட்டக்கூத்தரைத் தோற்கும்படி செய்துத் தான் அதிசீக்கிரமாய்க் காவியத்தைப்பாடி முடித்தனர்.

வால்மீகி ராமாயணத்தில் ராமாயண பாராயணம் செய்பவர்கள் பூர்வாங்கமாய் அனுசந்திக்கவேண்டியதும் சில அபியுக்தர்களால் செய்யப்பட்டதுமான இஷ்டதேவதா ப்ரார்த்தனை. வால்மீகியின் ஸ்தோத்ரம்:—

“𑌕𑍂𑌜𑌨𑍍𑌤𑌂 𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌮𑌧𑍁𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 ।
𑌆𑌰𑍁𑌹𑍍𑌯 𑌕𑌵𑌿𑌤𑌾𑌶𑌾𑌖𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿𑌕𑍋𑌕𑌿𑌲𑌂 ॥

(இ-ள்) [ராம ராம என்று மதுரமான அக்ஷரங்களினால் ஆநந்தமாய்ப் பாடுகிறதும் கவிதையாகிற கிளைகளில் ஏறியிருக்கிறதுமாகிற கோகிலம் (குயில்) போன்ற வால்மீகி மஹரிஷியை நான் ஸேவிக்கிறேன்.]

கம்பர், ஆழ்வார் விஷயமாகச் செய்த ஸ்தோத்திரம்:—

தருகை நீண்ட தயரதன் தான்தரும்
இருகை வேழத் திராகவன் றன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிட
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

(இ-ள்.) [தானங் கொடுக்கும் தன்மையில் கற்பகம் போன்ற கைகள் நீண்ட தசரதசக்கரவர்த்தியின் புத்திரரும் இரண்டு துதிக்கைகளையுடைய யானையை யொத்தவருமான ராமனுடைய கதையை, மாறுபாட்டையும் அழகையுமுடைய கடலால் சூழப்பட்ட பூமியிலுள்ள ஜனங்களுக்குச் சொல்வதற்குத் திருக்குருகை நாதனான ஆழ்வாருடைய ஒலிக்கின்ற கழலை அணிந்த திருவடிகள் நமக்கு ஓர் காப்பு.]

ஆஞ்ஜநேயர் ஸ்தோத்திரம்.

“𑌮𑌨𑍋𑌜𑌵𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑍇𑌗𑌂 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌂 ।
𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌂 𑌵𑌾𑌨𑌰𑌯𑍂𑌥𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌦𑍂𑌤𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌨𑌮𑌾𑌮𑌿”

(இ-ள்.) [மனோவேகமுள்ளவரும், வாயுவேகமாகச் செல்லத்தகுந்தவரும், இந்திரியங்களை ஜெயித்தவரும், புத்திமான்களுக்குள் மேலானவரும், வாயுதேவதையின் புத்திரரும், வானர சைன்யங்களுக்குத் தலைவரும், ராம தூதருமாகிய ஆஞ்சநேயரை நான் என் தலையால் வணங்கிச் சேவிக்கிறேன்.]

இவ்விஷயத்தைக் கம்பர்;—

அஞ்சிலே ஒன்று பெற்றா னஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனம்மை யளித்துக் காப்பான்.

(இ-ள்) [பஞ்சபூதங்களில் ஒன்றாகிய வாயுவினால் (புத்திரராகப்) பெறப்பட்டவரும், பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய நீரையுடைய சமுத்திரத்தைத் தாண்டினவரும், பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய ஆகாயத்தின் வழியாக (ஸ்ரீராமபிரான் விஷயமாக) இலங்கைக்குச் சென்றவரும், பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூதேவியின் புத்திரியாகிய சீதாதேவியை இலங்கையில் கண்டவரும், பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய அக்கினியால் (இராமபிரானுக்குப்) பகைவரது ஊராகிய இலங்கையைக் கொளுத்தினவருமாகிய ஆஞ்சநேயர் நம்மைக் கிருபை செய்து ரக்ஷிப்பார்.

இதன்மேல் அபியுக்தர் செய்தருளிய ஸ்ரீராமபிரான் ஸ்தோத்ரம்.

“ வைதேஹீஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹாமண்டபே
மத்யேபுஷ்பகமாஸநே மணிமயே வீராஸநே ஸுஸ்திதம் ।
அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜநஸுதே தத்வம் முநிப்ய: பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜே ஶ்யாமளம் ॥ ”

(இ-ள்) [தேவலோகத்திலுள்ள கற்பக விருக்ஷத்தைத் தம்முடைய ஸிம்மாஸனத்தின் பக்கத்தி லுடையவரும், ரத்தினங்களால் இழைக்கப்பெற்ற தங்கமயமான மண்டபத்தில் புஷ்பக விமானத்தின் மத்தியில் ஸீதா தேவியுடன் வீராஸனமாக வீற்றிருப்பவரும், அங்குள்ள ருஷிகளுக்கு உத்தமமான ராமசரிதமாகிற தத்வார்த்தங்களை அனுமார் எடுத்துச் சொல்லவும், பரதன் முதலானவர்களால் சூழப்பட்டவரும், சியாமளமான திருமேனியை யுடையவருமான ஸ்ரீராமபிரானை நான் தியானம் செய்கிறேன்.] கம்பர் ஸ்ரீராமபிரானுடைய புஜபலத்தை ஸ்தோத்திரம் செய்பவருக்கு ஏற்படும் பயனைக் கூறுகிறார்.

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

(இ-ள்) [இராக்கத சைன்யங்களை நசிக்கச் செய்து வெற்றிமாலை தரித்தவரும், கோதண்டம் என்கிற வில்லைக் கையி லேந்தியவருமான ஸ்ரீராமபிரானது புஜபல பராக்கிரமத்தைச் சொல்லித் துதிக்கும் பக்தர்களுக்கு, அவர்கள் விரும்பும் எல்லாப் பொருள்களும் கைகூடும்; ஞானமும் கீர்த்தியும் உண்டாகும்; மோக்ஷத்தை அடைதற்கு நல்வழியும் உண்டாகும்; வாஸனையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கிற லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும்.

பால காண்டம்.

இச்சொல் ஸ்ரீராமபிரானது பால்ய சரித்திரத்தைச் சொல்லும் காண்டம் என்று பொருள்படும். வால்மீகி ராமாயணத்தின் பாலகாண்டத்தில், ராமாயணம் உத்பத்தி முதல் ஸ்ரீராமபிரான் மிதிலையில் சீதையை விவாகம் செய்து கொண்டு அயோத்திக்குத் திரும்பி வந்தது வரையில் சொல்லப்பட்டிருக்கிறது,

கம்பர், ஸரயூ நதியின் மஹிமை முதல் இராமன் அயோத்திக்குத் திரும்பி வந்தது வரையில் சொல்லியிருக்கிறார். வால்மீகர் நாரதரைக் குறித்துச் செய்யும் பிரார்த்தனை:—

“ தப:ஸ்வாத்யாயநிரதம் தபஸ்வீ வாக்விதாம்வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகி ர்முநிபுங்கவம் ॥ ”

(இ-ள்.) [தபஸ், வேதாத்யயனம் இவைகளை எப்போதும் உடையவராயும், பேசும் திறமையில் சிரேஷ்டராயும், ருஷிகளுக்குள் மேலானவராயும் இருக்கிற நாரத மஹாமுனிவரைப் பார்த்து, வால்மீகி ருஷியானவர், (இந்த உலகத்தில் குணம் வீர்யம் தர்மம் இவைகளை உடைத்தான உத்தம புருஷன் யாரோ அவருடைய சரித்திரத்தைத்) தமக்கு உபதேசிக்கும்படி பிரார்த்திக்கிறார்.

அதற்கு நாரதர் வால்மீகருக்கு ராமாயண கதையைச் சுருக்கமாகப் பாலகாண்டம் முதல் ஸர்க்கத்தில் உபதேசிக்கிறார். அதற்கு ஸம்க்ஷேப ராமாயணமென்று பெயர். 2-வது ஸர்க்கத்தில் ராமாயணத்தின் உத்பத்தியைச் சொல்லுகிறார். 3-வது ஸர்க்கத்தில் வால்மீகி ருஷி தியானத்தினால் ராமாயணத்தைத் தெரிந்துகொண்டார். 4-வது ஸர்க்கத்தில் குசலவர்கள் ராமனுடைய சரித்திரத்தை ருஷிகளுடைய ஆச்ரமங்களிலும், ராமனுடைய ஸதஸ்ஸிலும் ஸங்கீதப்படி பாடினார்கள். இவைகளைப்பற்றிக் கம்பர் ஒன்றுமே சொல்லவில்லை. (கம்பர்) பாலகாண்டம் ஆரம்பம்:—

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே. (சிறப்புப் பாயிரம்)

(இ-ள்) [எல்லா லோகங்களையும் தாமே ஸிருஷ்டிக்கலையும் ரக்ஷிக்கலையும் ஸம்ஹரிக்கலையும் உடையவரும், தம்மை விட்டு நீங்காத அளவில்லாத லீலையை உடையவருமாகிய மூல புருஷன் எவரோ அவரையே நாங்கள் சரணமாக அடைகிறோம்.]

(குறிப்பு.) இதனால் ராமபிரானே பரத்வம் உடையவன் எனக் காட்டுகிறது. இந்தப் பாயிரம் கம்பராமாயணத்துக்கு மிகவும் முக்யமான நாயக ரத்னம் போல விளங்குகிறது. மேலும் திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில்,

> "உலகுதன்னை நீபடைத்தி யுள்ளொடுக்கி வைத்துமீண்
> டுலகுதன்னு ளேபிறத்தி யோரிடத்தை யல்லையால்
> உலகுநின்னொ டொன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்
> உலகுநின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே."

என்று திருவாய்மலர்ந்தருளி யிருப்பதற்கு ஒப்பாக, எம்பெருமான் தொழில்களை நடத்தச் செய்தேயும், எல்லாவற்றிலும் சம்பந்தப்படாதவன்போல் விலகி நிற்கிறான் என்று அவனுடைய பரத்துவத்தை உணர்த்துகிறது.

இதன் மேல் வால்மீகி ராமாயணம் 5-வது ஸர்க்கத்தில், அயோத்யா நகர மகிமையையும், இக்ஷ்வாகு வம்சத்தின் மகிமை முதலியவைகளையும் வர்ணிக்கிறார். இவ்விஷயத்தைக் கம்பர் ஆற்றுப்படலத்தில் ஸரயூ நதியையும், நாட்டுப்படலத்தில் கோஸல நாட்டையும், நகரப் படலத்தில் அயோத்யா நகரத்தையும் வர்ணிக்கிறார்.

> "கோஸலோ நாம முதித: ஸ்பீதோ ஜநபதோ மஹாந் ।
> நிவிஷ்ட: ஸரயூதீரே ப்ரபூததநதாந்யவாந் ॥"

(இ-ள்) [ஸரயூ நதிக் கரையில் கோஸல மென்று ஓர் தேசம் இருக்கிறது. அது வெகு விஸ்தார முள்ளது. அது அளவற்ற தனதான்யங்களுள்ளது. அதிலுள்ள ஜனங்கள் எப்போதும் கவலையற்று ஆனந்தமாய்க் காலங் கழிக்கிறார்கள்.] சரயூநதி

> இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
> பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
> சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
> வுரவு நீரநிலத் தோங்கு முயிர்க்கெல்லாம். (கம்பர்)

(இ-ள்) சூரிய வம்சத்திற் பிறந்த எண்ணிறந்த அரசர்களுடைய துதித்தற்குரிய நல்லொழுக்கத்தைக் கொண்ட சரயூ நதியானது, கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் விருத்தியடைந்துகொண்டிருக்கிற உயிர்களை வளர்க்கும் தன்மையில் தாய் முலையை ஒத்திருக்கின்றது. (ஆற்றுப்படலம்—12.)

கோசலதேசம்.

> சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
> மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
> காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
> பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை. (கம்பர்)

(இ-ள்) வயல்களில் சேல் போன்ற கண்களையுடைய மாதர்களைப் போல் நடக்கிற செங்கால் அன்னங்கள், தாமரை மலர்களின் படுக்கையில் கண் வளர்த்திய இளங்குஞ்சுகள் சேற்றைக் கால்களில் உடைய எருமைகள் தங்கள் கன்றுகளை நினைத்துக்கொண்டு கனைப்பதினால் ஒழுகிய பாலை அக்குஞ்சுகள் குடித்து மயங்குகையில் அவைகள் நித்திரை செய்யும்படி அங்கிரி லுள்ள பச்சைத் தேரைகள் அவைகளைத் தாலாட்டும்.]

நாட்டுப்படலம்—13.

இதனால் மருதநிலம் கூறப்பட்டது.

> தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
> ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
> தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
> ஆய மங்கைய ரங்கை வருந்துவார். (கம்பர்)

(இ-ள்) [தோய்ந்த வெண் தயிர்த் தாழிகளில் தயிர் கடையும்போது மத்துக்களின் ஓசையும், ஆயர் பெண்கள் தங்கள் கைகளில் தரித்திருக்கிற வெண்மையான சங்கு வளையல்கள் ஒலிக்கவும், மெலிந்த நுட்பமான அவர்கள் இடைகள் இரு புறங்களிலும் சென்று துவளவும், இடைச் சேரிகளிலுள்ள இடைப் பெண்கள் தங்கள் கைவருந்தத் தயிர் கடைவார்கள்.] (நாட்டுப்படலம்—28.

இதனால் முல்லைநிலம் கூறப்பட்டது. வால்மீகி அயோத்தியா நகரத்தின் வளம் கூறுகிறார்:—

> "அயோத்யா நாம நகரீ தத்ராஸீல்லோகவிஶ்ருதா ।
> மநுநா மாநவேந்த்ரேண யா புரீ நிர்மிதா ஸ்வயம் ॥"

(இ-ள்) [அந்தக் கோசல தேசத்தில் உலகத்தில் பெயர்பெற்றதாயும், மனுஷ சிரேஷ்டராகிய மனு சக்ரவர்த்தியினால் தானே நிர்மாணம் செய்யப்பட்டதாயு மிருக்கிற அயோத்தி என்று பெயர் பூண்ட ஓர் நகரம் உண்டு.]

> செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்
> வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது லரம்பில்
> எவ்வுல கத்தோ ரியாவருந் தவஞ்செய் தேறுவா னாதரிக் கின்ற
> அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்தியா நகரம். (கம்பர்)

[(இ-ள்) அழகை உடையதும், இனிமை பொருந்தியதும், நற்பொருளிற் சிறந்ததும், நுட்பம் மதுரம் இவைகளை உடைய சொற்களைக் கவர்ந்த தென்மொழி கவி சிரேஷ்டராகிய சடகோபர் முதலியோராலும் வட நூலில் வல்லவரான வால்மீகி முதலானவர்களாலும் புகழப் பெற்றதும், அளவற்ற எல்லா உலகத்தவர்களும் தவஞ்செய்து பெறுதற்கு விரும்புகிற பரமபதமாகிய உலகத்திலிருப்பவர்களும் இறங்கி வருவதற்கு விருப்பத்தைக் கொடுக்கத்தக்க பெருமை உடையது அயோத்தி என்று பெயர் பூண்ட நகரம்.] இதுவும் முல்லை நில வருணனை.

நகரப் படலம்—1.

இந்த நகரத்திற்கு அரசனைக் கூறுகிறார்:—

“ தாம் து ராஜா தசரதோ மஹாராஷ்ட்ரவிவர்தந: |
புரீமாவாஸயாமாஸ திவம் தேவபதிர்யதா || ”

[(இ-ள்) அந்த அயோத்யா நகரத்தை இதற்கு முன்னுள்ள அரசர்களைக் காட்டிலும் கீர்த்தியுள்ள தசரதர் என்கிற அரசர், தேவலோகத்திலுள்ள இந்திரன் அமராவதி என்னும் பட்டணத்தை ஆண்டு வருவதுபோல் இவரும் ஸ்திரமாய் ஆண்டுவந்தார்.]

அம்மா ணகருக் கரசன் னரசர்க் கரசன்
செம்மாண் டனிக்கோ லுலகேழினுஞ் செல்ல நின்றான்
இம்மாண் கதைக்கோ ரிறையாய விராம னென்னும்
மெய்ம்மாண் கழலோற் றருநல்லற மூர்த்தி யன்னான். (கம்பர்)

[(இ-ள்) அந்த மாட்சிமை பெற்ற அயோத்யா நகரத்திற்கு அரசன் யாவனெனில், உலகத்திலுள்ள அரசர்களுக் கெல்லாம் மேலாகிய அரசனும், பெருமை பொருந்திய தன்னுடைய செங்கோலானது ஏழு உலகங்களிலும் செல்லும்படி நின்றவனும், இந்தப் பெருமை பொருந்திய சரித்திரத்திற்குத் தலைவனாகிய இராமபிரான் என்று சிறப்புத்துச் சொல்லப்படுகிற பலமும் பெருமையுமுடைய வீர கண்டையை அணிந்தவரைப் பெற்ற நல்ல தரும மூர்த்தியை ஒத்தவருமாம்.] (அரசியற்படலம்—1.)

ஸ்ரீ:

ஸ்த்ரீகளின் ஆந்ஹிக தர்மங்கள்.

(ஸ்ரீ உப. சொக்கனூர் பார்த்தஸாரதி ஐயங்கார்)

(முன் தொடர்ச்சி 16–வது ஸம்புடம், 213-பக்கம்)

பிறகு வாத்ஸ்யாயந ஸூத்ரம் 3-ல் “ பூஜிததைவதாயதநம் ” என்பது பகவத் ஸந்நிதிக்குப் போய்ப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டு பகவதாராதந உபயுக்தங்களான பாத்ரங்களைக் கீழே விவரிக்கிறபடி சுத்தி செய்து, பகவானை ப்ரதக்ஷிணம் பண்ணி ஸேவித்துவிட்டு, ஸம்ஸ்க்ருத பாஷையிலும் தமிழிலும் பூர்வாசார்யர்கள் செய்துள்ள ஸ்தோத்ரங்களால் ஸ்துதித்து நமஸ்காரங்களைப் பண்ணி, தன்னுடைய புத்ரன் புத்ரி முதலிய பாலர்களுக்குத் தேஹ சுத்தி பண்ணி அலங்காரம் செய்து, சங்க சக்ராதி ரூபங்களான ஆபரணங்களைத் தரிப்பித்து, அவர்களையும் பெருமாளை ஸேவிக்கும்படி செய்து, தானும் பகவானை ஸேவித்துக்கொண்டு “ ஹே ! பகவந் ! இவன் தேவரீருடைய புத்ரன் ; இவள் தேவரீருடைய புத்ரி ” என்று பகவானிடம் ஸமர்ப்பிக்கவேண்டும்.

“ ப்ராத:காலே து யா நாரீ தத்வார்க்யம் விவஸ்வதே |
ஸப்தஜந்மாநி வைதவ்யம் ஸா நாரீ நைவ பஶ்யதி ||
க்ருத்வா பத்மமுகம் பாத்ரே தண்டுலைர்வாக்ஷதாதிபி: |
பூஜயேத்தத்ர யா வை தஸ்யாஸ்ஸந்துஷ்யந்தி தேவதா: |
புஞ்ஜாதீத்து யா நாரீ ஜ்யேஷ்டாயை ப்ரதமம் பலிம் |
பௌத்ராஶ்ச தநா ஆயுராஸக்தி ஸா ப்ரத்ய நாகம் வ்ரஜேத் |
ஸ்வயமேவ நாரீபி: ஜ்யேஷ்டாயை பலிகஞ்சநா |
க்ஷீணாநாம் ப்ரத்யஹம் காம்யம் ப்ரத்யவஸ்த்ரயதே ஸ்த்ரீபி: || ”

[வ்யாஸஸ்ம்ருதி:]

எந்த ஸ்த்ரீ, காலை வேளையில் ஸூர்யனை உத்தேசித்து அர்க்யம் ஸமர்ப்பிக்கிறாளோ அவள் ஏழு ஜந்மங்கள், தான் விதவையாக இருப்பதைக் கண்ணால் பார்ப்பதில்லை. எவள் கீழ்ச் சொன்ன ப்ரகாரம் பகவத்வந்நாதிகளோ அல்லது பத்மம் முதலான மண்டலங்களை வரைந்து அவற்றில் பகவான் இருப்பதாக த்யானித்து அமந்த்ரமாக அக்ஷதை முதலியவற்றால் அர்ச்சிக்கிறாளோ, அவள் விஷயத்தில் ஸர்வ தேவதைகளும் ஸந்தோஷத்தை அடைகிறார்கள். ஸ்த்ரீகள், தாங்கள் சாப்பிடும்பொழுது முதலில், ஜ்யேஷ்டாதேவி (மூத்தவள்) எனப்படும் ப்ரஸித்தையானவளின் பொருட்டு ஒரு பிடி அந்நத்தைப் பலியாக அவச்யம் எடுத்துவைத்துப் பிறகு சாப்பிடவேண்டும்; அப்படிச் செய்தால் புத்ரன் பௌத்ரன் தநம் இவைகள் வ்ருத்தியடைகின்றன. இல்லாவிட்டால் அவைகளுக்குக் குறைவு ஏற்

படுவதுடன் அவள் நரகத்தையும் அடைகிறாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

" காயசாதஸ்யோநிஃத்யம் வல்ஜாலம்ஹமேதத்வா ।
திஷ்டத்ஸ்வஸ்ஞவநா ஹதஃஷ்டியஹிதே ஸதா ॥ "

[ஜ்யோதிஷ ஸ்ம்ருதௌ]

" மாஷா ஹரதத்வமேஷா நாயகஹமிநீஷாததிஷா
யஜமாநம் வ்ருதிவாதிந் " [வாத்ஸ்யாயநஸூத்ரம்]

பிறகு, மாமியார் மாமனார் பர்த்தா இவர்களுக்கு வந்தநம் செய்துவிட்டுத் தன்னுடைய வேலைக்காரர்கள், நாத்தனார் முதலானோர், அவரது பர்த்தாக்கள் தங்கள் வீட்டிலிருந்தால் அவர்களுக்கும் அவரவர்க்குத் தகுந்த மர்யாதை செய்யவேண்டும்.

அடியிற்கண்ட சுலோகங்கள் ஸ்திரீகள் தங்கள் மாமியார் முதலானவர்களிடம் இருக்கவேண்டிய மாதிரிகளைச் சொல்லுகின்றன :—" ஹக்தி: ஸ்வயமேவம்ஸ்ரீதேஷா காமாணாஸ்வஸ்ருஷா நஉம்ஸிமா:ஸ்ருதிபஃஷாதரஷா மௌநவம் மாஜநேக்ஷாம்திः கரதாமஸ்யவி । ஸூநாகாமுயொஷிதாம் வ்ருதவியிःஸொயம் வியெயःவநஃஷ்டதஃ ஃயிதேதி ஸ்ரீயஸஸ்பாஸிः ஸவநதீஷவி ॥

குலமாதர் தம் கணவனிடத்தில் பக்தியும், தம்மை யடைந்தவர்களிடம் தயையும், மாமியார் மாமனார்களிடம் தலைவணக்கமும், தம் கணவரது ஸஹோதரர் பத்நி (ஓர்படிகள்)களிடம் பிரியமும், பூஜிக்கத் தகுந்தவர்களிடம் கௌரவமும், தமக்கு விசேஷ அபராதம் செய்தவர்களிடம் பொறுமையும் முகவாட்டமின்மையும், கடைப்பிடிக்க வேண்டும். " நிவஷ்யாஜாஃயிதே நநாம்ஷரஷாநதா ஸ்வஸ்ருஷா ஹக்தாஹவ ஸிந்யாபாஷா வஸ்தூமா வஸிஜநேஸ்வஸாஸவநதீஷவி । ஹதஃஷிஃதஜநெஸந ஃவஅநாவிஞா அதயெஸிஷா வ்ராயஸ்வஸம்வநநம் நதஹ தநிஃம் விதௌஷயாஹதரஃஷா "
இந்த சுலோகமும் மேற்சொல்லிய தாத்பர்யத்தையே ப்ரதிபாதிக்கிறதுடன், இப்படி நடப்பது தான் மருந்தில்லாமல் பர்த்தாவை வசப்படுத்தும் வழி என்றும் சொல்லுகிறது.

பிறகு, வீட்டுக்குவேண்டிய பாத்ரங்களைச் சுத்தி செய்யவேண்டும்.

॥ ஸ்ரீவஸாஸ: ॥

" ஹஸ்நாஸாஷ்யதேகாம்ஸ்யம் ஸாஸ்யா யஞ ஸ்ரீவஸ்யதே ।
ஸாஸாஉஸ்தைரணாஸம்ஸ்வரஷம் ஸாஷ்யதேஃந்யாவஸெவதைः ।
மவாஸ்ராதாமி காம்ஸ்யாநி ஸ்வகாமொவஸாதாமிஅ ।
ஸாஷ்ஞி ஃயயஷிःக்ஷாலைः ஸலெராஷிஷாநியாமிஅ ।
ஹஸ்நாஸாஷ்யதே காம்ஸ்யம் தாஃ ஃதௌநஸாஷ்யதி ॥ "

வெண்கலப் பாத்ரங்களைச் சாம்பலினாலும், தாமிர பாத்ரங்களைப் புளியினாலும் சுத்தம் செய்யவேண்டும். மேலே சில இடங்களில், மேல் இருக்கும் பூச்சுக்கள் போனால்தான் சுத்தமென்று இருப்பதால் அதை அநுஸரித்து வெண்கலத்துக்குப் புளியும் சாம்பலும், தாமிரத்துக்குப் புளியும் மண்ணும் இட்டுச் சுத்தி பண்ணவேண்டும். வெண்கலத்துக்கே கள்ளின் ஸ்பர்சம் ஏற்பட்டாலும், மலமூத்ர ஸ்பர்சம் நேர்ந்தாலும், அவற்றை அக்நியில் காய்ச்சிப் பிறகு முன்போல் தேய்க்கவேண்டும். மாம்ஸ ஸம்பந்தம் ஏற்பட்டால் இரண்டு தடவை காய்ச்ச வேண்டுமென்று சில ஸ்ம்ருதிகள் கூறும். அவற்றையே பசுமாடு நாய் காக்கை முதலியன தொட்டாலும், சூத்ரனுடைய உச்சிஷ்டமானாலும் பத்துத் தடவை சாம்பல் புளிகளால் அலம்பவேண்டும். இப்படியே சாதாதபரும் சொல்லியிருக்கிறார்.

" மஂஉஷம் வாஃபளஅம்அ கரக்ஷாவெ காம்ஸ்யஹாஜநே ।
ஷஞாஸாஹிக்ஷிவெஷ்ஃஉள உஸரதஷ் வாநஸாஹமெஸ ॥ "

வெண்கலப் பாத்ரத்தினால் வாய் கொப்பளித்தல் கால் அலம்புதல் செய்தால், ஆறுமாஸம் அந்தப் பாத்ரத்தைப் பூமியில் புதைத்து வைத்துப் பிறகு சுத்தி பண்ணி உபயோகிக்கவேண்டும். இந்த ப்ரகாரமே ஆங்கிரஸ மஹர்ஷியும் கூறியுள்ளார்.

॥ வொயாயநः ॥

" தைஜஸாநாம் வாத்ராணாம் உஷிஷொவ ஹதாநாம் த்ரி
ஸப்தகரக்ஷःவஸிஉஜஃநம், தயாஉஸ்தவாஸீஷொஹிதஸெதः
வ்ரஹரதஷ்வஹதாநாம் வாநः காணாம் ॥ "

வெண்கலம் முதலான எல்லாவித தைஜஸ (லோஹஸம்பந்தமான) பாத்ரங்களுக்கு உச்சிஷ்ட ஸ்பர்சம் ஏற்பட்டால் இருபத்தொரு தடவை சுத்தி பண்ணவேண்டும்; மல மூத்ரங்கள், ரத்தம், ரேதஸ் இவைகளின் ஸ்பர்சம் ஏற்பட்டால் உடைத்துப் புதிதாகச் செய்துகொள்ளவேண்டும். இதில் புந: கரண விஷயம் வெகு நாள் ஸம்பந்தமுள்ளவைகளுக்கென்று பராசர மாதவீயத்தில் வ்யவஸ்தை சொல்லப்பட்டது.

இரும்புப் பாத்ரங்கள் ஈயப் பாத்ரங்களுக்கு " ஆயஸஸ்வஷாயஸாநாம்ஸீஸஸ்யாக்ள விஸொபாயநம் " இரும்புப் பாத்ரங்கள் இரும்பு அரத்தால் ராவப்பட வேண்டும். இதனால் அதில் பிடித்திருக்கும் லேபம் போகும்படி தேய்க்கவேண்டுமென்று ஏற்படுவதால், தற்காலம் அநுஷ்டானத்தில் இருப்பதுபோல், கல் முதலியவற்றால் நன்றாகத் தேய்த்து எண்ணெய்ப் பசை முதலிய பூச்சுக்கள் போகக் கோமயத்தாலும் தேய்க்கலாமென்று தோன்றுகிறது. ஈயப் பாத்ரங்களுக்கு அக்நியில் லேபம் போகும்

படி சூடேறக் காய்ச்சவேண்டியது. "தயாபலாநாம் லீஸாநாம் சுஸ்
ஸம்வேஷ்டணேநது" என்பது மார்க்கண்டேயர் திருவுள்ளம்.

॥ வராஹ: ॥

"ஹம்ஸஉஷ்டி தயாபஸ்ம்மம் ரளவஷலளவணாஷாஜநம் ।
உணிவாத்ராணி ஸம்வஸ்ய தைஜதாஷு வ்ருக்ஷாஸ்யெஜ்ஜ ஜெஞை: ।
வாஷ்ணெதா வாநவஷ்ட: ஸாலிரெஷாஹ்யாஹாஜஹரதா ॥"
உநா: ॥ "நிஜெவம் காம்ஸநம்ஹாணு உஷ்ணெவ விஸாஷ்யதி ।
சுஜ்ஜஉஷ்டயம்லெவ ராஜதம் அநாவஷ்ரஸம்"
॥ஸாதாதவ: ॥ "ராஜதம் காம்ஸநம்தா உம் த்ரவாகாஷ்டயஸம் தயா ।
ரீதிகாஜெஹ லீஸாநி ஸாஷ்யெஜ்ஜெஉஷ்வஷ்டணாக ॥"
யஉ: ॥ "ராஜதஸ்ய ஸாவணஸ்ய தாஉஸ்ய த்ரவாநஸ்யா ।
ரீதய: காம்ஸ்யலீஸாநாம் ஹஷ்நாஸளஅ உாஅதெ ॥"
உஸநா: ॥ "ஸாவண்ட ராஜத தாஉ த்ரவாலீஸகாம்ஸ்யநாம் சுஷ்
ரெவஹஷ்லஸ்யாக்தாஷி:, உணியாநா உஷ்ரெவ உரத்தம் யாக்தாஷி:,
தைஜஸாநாம் ஹஸ்நாத்ரி: வ்ருக்ஷாஸ்நம் கநகராஜத உணிஸம்வ
ஸாக்தி உவமாநாம் வஜ்ரவிதுலாநா ரஜ்ஜூஅஉணாம் அஷிஸ்ளஅம் ॥"

இத்யாதி வசநங்களால் தங்கம் வெள்ளி தாம்ரம் பித்தளை ஈயம் வெண்கலம் முதல்ான பாத்ரங்களுக்கு ஸாமாந்ய அசுத்தியில் சாம்பலுடன் கூடின ஜலத்தாலும், விசேஷ அசுத்தியில் கல்லிஞல் நன்ருய்த் தேய்த்து மறுபடி முன் சொன்ன மாதிரி இருபத்தொரு தடவை சுத்தம் செய்ய வேண்டு மென்றும், யானைத் தந்தம், சங்கு, சிப்பி, ரத்நம் முதலியவற் றிற்கு மண்ணுடன் கூடிய ஜலத்தால் அலம்புவதுதான் சுத்தியென்றும், கயிறு தோல் கல் முதலியவைகளை ஜலத்திஞல் அலம்பிஞல் போதுமென் றும் ஏற்படுகிறது.

வராஹா: ॥ "உரஷ்டபெஉஹநாஷ்டி: யாநஸ்ம்லெவ
[உாஜநாஉவி ॥"

மண் பாண்டங்களுக்கு அபரிசுத்தி ஏற்பட்டால் தீயில் இட்டுக்கொளுத்த வேணும்; தாங்யங்களை அடைக்க வேணுமென்று பராசரர் சொன்னர் மண் பாண்டங்கள் உச்சிஷ்ட ஸ்பர்சத்தில் தேய்த்து அலம்புதலும், அவற் றின் லேபநத்தில் கொளுத்துதலும் மலமூத்ராதி ஸ்பர்சங்களில் எறிந்து விடவேண்டு மென்று போதாயநரும், தான்யங்கள் வஸ்த்ரங்கள் பசுவா யிருந்து சண்டாள ஸ்பர்சம் நேர்ந்தால் ப்ரோக்ஷணமும், அல்பமாக இருந் தால் அலம்பவும் வேண்டு மென்றும், மண்பாண்டங்களுக்குச் சண்டாள

ஸம்பர்க்கம் நேர்ந்தால் எறிந்துவிடவேண்டு மென்று மநுவும், அல்ப தாந் யங்களில் மூத்ராதி அசுத்த ஸ்பர்சம் ஏற்பட்டால் பட்ட இடத்தைத் தூர எறிந்துவிட்டுப் பாக்கியை அலம்பவேண்டு மென்று விஷ்ணுவும், அநேகம் புருஷர்களால் கொண்டுவரப்படும் தாந்யங்களில் சண்டாள ஸ்பர்சம் ஏற் பட்டால் ப்ரோக்ஷணமும், மூத்ராதி ஸ்பர்சத்தில் அவை பட்ட இடத்தை மாத்ரம் எடுத்துவிட வேண்டுமென்றும், கண்ஜலம் மண் தூள் இவை ஸம் பந்தப்பட்டால் தோல் போக்க வேண்டுமென்று போதாயநரும், அநேக பேர்களால் சுமக்கத் தகுந்த நெல் யவை கோதுமை இவைகளுக்கு க்ரய மாக நெல்லுக்கு ப்ரோக்ஷணமும், யவைக்கு அக்நியைக் கொளுத்திக் கொண்டு அதஞல் சுற்றுதலும், கோதுமைக்கு நன்ருய் அலம்பவும் வேண்டு மென்றும், நெல் அரிசி முதலானவற்றைக் கையால் நன்ருய்த் தேய்க்க வேண்டு மென்றும், பயறு முதலானவற்றையும் நன்ருகத் தோல்போகத் தேய்க்க வேண்டுமென்றும் காச்யபரும் சொன்னர்கள்.

உநா: ॥ "களஸெயா விகயொஉஷ்டாஷெ: காதாவாநா உஸிஷ்டெகெ: ।
ஸ்ரீஹஜெரம்ஸா வடாநாம் க்ஷளஉணாம் மளர ஸஷ்டவெ: ।
க்ஷளஉவஷ்டம்வ ஶ்ரம்மாணாம் சுஷ்டி ஹம்தஉயஸ்யஅ ।
ஸாவிஷ்டஜாநதாகாயஷ்டா மொஉஷெத்ரணொஉகெநஅ ॥"

பட்டு, ஆட்டுமயிர்க் கம்பளி இவை உளுத்தமாஞலும், நேத்ர படம் புத்ர ஜீவி விதையிஞலும், "காதாம்வம்" அதாவது பர்வதங்களில் உண்டான குறும்பாட்டு மயிர் கம்பளி பில்வப் பழத்தாலும், வெண்பட்டு வெண் கடுகி ஞலும், சங்கு கொம்பு எலும்பு தந்த விகாரங்கள் வெண்பட்டைப் போல வும், முன் சொன்ன வஸ்துக்களுடனும் கோமூத்ரத்தையாவது ஜலத்தையா வது கலந்து சுத்திசெய்ய வேண்டுமென்று மநுவும், அப்படியே யாஜ்ஞவல்க் யரும், மேற்கண்ட வஸ்துக்கள் அல்பசௌசத்திஞல் அதாவது சோஷண ப்ரோக்ஷணங்களால் சுத்தியடைகின்றன வென்றும், அவைகளுக்கே அமேத்ய ஸ்பர்சம் ஏற்பட்டால் மநு வசநப்படிக்கும் உப்பு ஸம்பந்தப்பட்ட ஜலங்க ளாலும் சுத்தி யென்று தேவலரும், "வெணாவஷ்க்ஷீராணாம் ஔணஷ்கா வஷ்டால வாஸஸாம் । ஔணஷ்ரெ த்ரவடாநாம்அ வெராக்ஷணாத்ஷ்ஷி ரிஷ்யதெ॥" மூங்கில், அதன் விகாரங்களான பதார்த்தங்கள், மரவுரி முத லான பூர்வோக்த வஸ்துக்களுக்கு அபரிசுத்தி அல்பமாஞலும் பசுவாஞ லும் ப்ரோக்ஷணம் போது மென்று பராசரரும்,

"ஸளஅஉாவிகஜொஉணாம்தா வாபுஷ்ஹ்யெகெஷ்டஉாரஸ்ஷிஹி: ।
ரெதஃஷ்ஷ்ரஷம் ஸவஷ்ரஷ உாவிகம் ந வ்ருஉாஷ்யதி ॥"

ஆட்டு மயிர்க் கம்பளிகள், வாயு ஸூர்யன் சந்த்ரன் இவைகளின் கிரணங்களால் சுத்தி யடைகின்றனவென்றும், கம்பளியில் ஸ்பர்சம் ரேதஸ் ஸ்பர்சம் ஏற்பட்டாலும் தோஷம் கிடையா தென்று அங்கிரஸ்ஸும் சொன்னார்கள்.

"ஊர்ணாகௌஸேய குதப பட்டக்ஷௌம துகூலஜா: ।
த்ருணகாஷ்டஸ்ய ரஜ்ஜூநா ஊர்ணகாஷ்டாக்ஷணம் மதம் ।
தத்விகாரஸ்ய வயாநாநி ரக்தவஸ்த்ராதிகாநி ச ।
ப்ரோக்ஷிதாதபெசைவ ப்ரக்ஷணாச்சுத்திதாயகா ॥"

கோரையினால் செய்யப்பட்ட பாய் முதலியவைகள், முறங்கள், சணல் விகாரங்களான சாக்கு முதலியவைகள், காய் கிழங்கு கீரை பழம் தோல் வைக்கோல் முதலானவைகள், கட்டை விறகு கயிறு முதலானவைகள் ப்ரோக்ஷணத்தினால் சுத்தமடைகின்றன வென்றும், மெத்தை திண்டு தலையணை முதலானவை, சிவப்பு வர்ணமுள்ள வஸ்த்ரங்கள், இவைகட்குத் தோஷம் ஏற்பட்டால் வெயிலில் போட்டுக் கையால் துடைத்து ப்ரோக்ஷிக்க வேண்டுமென்று பராசரரும் தேவலரும் சங்கரும் சொன்னார்கள்.

"ரத்யாகர்த்தமதோயாநி ஸ்ப்ருஷ்டாந்யந்த்யவாயஸை: ।
மாருதேநைவ சுத்யந்தி பக்வேஷ்டக சிதாநி ச ।
வாயோர்விப்ருட் ஸூர்யரச்மி சந்த்ரரச்மிபிரேவ ச ॥"

வீதிகள், மார்க்கங்கள், சுடப்பட்ட கல்லுளிகளினால் கட்டப்பட்ட வஸ்துக்கள், சண்டாளன், நாய், காக்கை முதலானவற்றால் தொடப்பட்டாலும் அப்படியே சேற்றுடன் கூடின ஜலம், இவைகள் ஸூர்ய சந்த்ர கிரணங்கள் காற்று ஸ்பர்சம் இவைகளால் சுத்தி யடையுமென்று யாஜ்ஞவல்க்யரும் பராசரரும் சொன்னார்கள்.

இந்த விதிப்படிக்கும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய அநுஷ்டாநப்படிக்கும், புளி மண் கோமயம் சாம்பல் இந்தக் கலவையினால் திருவஷ்டாக்ஷரம், வாஸுதேவாயநம: ஸங்கர்ஷணாயநம:, அநிருத்தாயநம:, புருஷாயநம:, ஸத்யாயநம:, அச்யுதாயநம: என்று 8 தரமும், கேசவாயநம: என்று 12 ம், மத்ஸ்யாயநம: என்று 10-ம், உத்தரவாக்யம் ஒன்றும், ஆக 32-நாமாக்களுடைய உச்சாரணத்துடன் தோஷதாரதம்யத்துக்கு ஈடாக 3-தடவை முதல் 32 தடவை வரையில் தேய்த்து அலம்பவேண்டும். எவ்வளவு சுத்தமுள்ளதாக இருந்தாலும் ஒரு பக்ஷத்துக்கு மேற்பட்டுப் பழகின மண் பாண்டங்கள் கூடா. மண் பாண்டங்களில் பாகம் செய்வதானால், அன்றைக்கு பாகம் செய்த பாண்டத்தை நன்றாய்ச் சுத்திபண்ணி, அக்நி வெயில்களால் காய்ச்சி, மறு தினம் வேறு பாண்டம் உபயோகப்படுத்தவேண்டும். இம்மாதிரியே மாறி மாறி ஒன்று விட்டு ஒரு நாள் உபயோகப்படுத்தவேண்டும். மண் பாண்டத்தில் பாகம் செய்தால் தேஹாரோக்யம் ஜாடராக்நி வ்ருத்தி உண்டாகின்றன வென்பது சரகர் அபிப்ராயம்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

ஸ்ரீ. உப. வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸம்பந்தமான சில முக்ய அம்சங்களும் தத்நுகுண ஸாரப்ரயோஜநமும் ஸ்வரூப தாரிகளாயிருக்கிற அநேகர்க்குப் போதகமாம்படி ஸ்ரீ வேதாந்த தீபிகையில் ப்ரசுரம் செய்ய வித்வான்களை ப்ரார்த்திக்கிறேன். மேற்கூறிய விஷயமும் பின்வரும் ப்ரச்நங்களும் விவரமாக சுருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய தத்வங்களை அநுஸரிப்பவர்களுக்கு ஜ்ஞாதமாம்படி நமது வித்வான்கள் நிர்ணயிக்க க்ருபைசெய்யவேணும்.

1. ப்ரவரம் கோத்ரம் ஸூத்ரம் சொல்வதில், த்ரயார்ஷேயம், பஞ்சார்ஷேயம் வரித்து நமஸ்கரிப்பதற்குக் காரணம், அந்த ரிஷிகள் பிது: பிதாமஹ ப்ரபிதாமஹ முதலான ஜ்ஞாதி வர்க்கங்களில் சேர்ந்தவர்களா? அல்லது அவர்கள் ஜ்ஞாந பரம்பரையில் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களா? அல்லது யாதொரு ரக்த ஸம்பந்தமில்லாமல் ஆதி ரிஷியின் தத்வங்களை ப்ராஹ்மணர்களுக்கு ப்ரவசநம் செய்து அவர்களைத் தமது கோஷ்டியில் சேர்த்துக்கொண்டவர்களா?

2. "ஸுஹிம்ஸாவ்யமோயமே:" எனும் ந்யாயத்தை நிர்ணயித்தும் ஸ்ரீ வைஷ்ணவர்க்குத் தப்தம் (சங்க சக்ராங்கித முத்ரை) முக்யமாக ஏற்பட்டு அநாதி காலமாய் நடந்து வருகிறது. இது வேத ஸூத்ரத்திலாவது உபநிஷத்திலாவது இருப்பதாகத் தெரியவில்லையென்று சிலர் ஸாதிக்கிறார்கள். ப்ரஸ்துத கால மதாபிமாநிகளான சிறியோர், பெரியோர்களால் காரணமின்றி மூடபக்தி ஆசிரமையால் அநுஸரித்ததற்குத் தகுந்த காரணமும் ஆதாரமும் இல்லையென்றும், தாம் தப்தம் செய்துகொள்வது உசிதமன்றென்றும் அலக்ஷ்யம் செய்து வருகிறார்கள்.

யஜ்ஞ க்ரதுக்களில் ப்ரத்யக்ஷமான பசுக்களை யூபஸ்தம்பத்தில் கட்டி ஹிம்ஸித்து வபாஹோமம் செய்வது ந்யாயமாகுமா? மேலும் யஜ்ஞம் செய்வதால் மோக்ஷ பதவியைக் காட்டிலும் ஸ்வர்க்க பதவியடைதல் சிலாக்யமில்லை யென்பதாக சாஸ்த்ரம் ப்ரமாணிக்கிறதே. ஆகையால் யஜ்ஞம் செய்வது யுகதர்மமா?

3. 'ஸர்வம் ஜகத் கர்மவசம்' என்றால் அந்தப் பாபம் தேவஸ்ருஷ்டிக்கும் ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கும் முன் உள்ளதா? ஜீவஸ்ருஷ்டியான பிறகு புண்யபாபங்கள் உண்டாயினவா? ஸ்ரீ பகவத்கீதையில் பாப புண்யங்கள் ஸமமென்றும், தைவபக்தி உள்ளளவில், தர்மார்த்த காமமோக்ஷ ஸாதநம் வேறு வேண்டியதில்லை யென்றும் கூறப்பட்டிருக்கிறதே. மநுஷ்ய ஜந்மம் யாவத் ஜீவகோடியிலும் சிரேஷ்டமென்றும், பரமாத்மாவே பரம புருஷன் என்றும் சுருதி விதிப்பதால், மநுஷ்ய ஜந்மம் ஜநித்து உலகவாழ்க்கையில் இருந்துவரும் காலத்தில் பகவாந் ஆஜ்ஞைபால் அவனது வஸ்துவாயிருப்பதற்குப் பாபஹேது ஆஸ்பதம் தோற்றவில்லை. ஆகையால் பாபத்துக்கு ஆதி எப்போது? எங்ஙனம்?

4. ஜீவாத்மா ஏற்படும்போது, ஸுகம் துக்கம் தாரித்ர்யம் ஐசவர்யம் சரீராவஸ்தை இவை தேவ ஸ்ருஷ்டியாலும் மநுஷ்ய தாரதம்யம் வர்ணாசிரமம் இவை எப்படி உண்டாயின? ப்ரக்ருதி பரமாத்மாவுக்கு உட்பட்டிருக்க, தன் குணத்தை நல்வழியில் செல்லவிடாமல் கெட்ட விஷயத்தில் நடத்த ஹேது எப்படி உண்டாயிற்று?

5. யுகாந்தரங்களில், அஸுரர்கள் ராக்ஷஸர்கள் தேவதைகளை உபத்ரவித்ததனாலும், பாபங்கள் நிறைந்திருந்ததனாலும், பகவான் அக்காலங்களில் அவதரித்துப் பாபிகளான அஸுர ராக்ஷஸர்களை ஸம்ஹரித்துத் தேவதைகளையும் பூஸுரர்களையும் காப்பாற்றினதாகப் புராணங்களால் தெரியவருகிறது. இக் கலியுகத்தில் அப்படிப்பட்ட பாபங்கள் இல்லையா? ஸுதர்மத்தை விட்டுத் துராசார ப்ரவ்ருத்தியில் ஸதா ஸஞ்சரிக்கிறவர்கள் காலக்ஷேபம்பற்றி அநேகர் அல்லவா? இவர்கள் இப்புவியில் நல்வாழ்வுடன் மிஞ்சித்தும் க்லேசமின்றி ஸுகமாயிருந்துவருவதைப் பார்த்துப் பகவத்பாகவத கைங்கர்யபரர்கள் தங்கள் விதியின்பயன் நிர்யாண தசைக்குக் கொண்டுவரும் காரணம் தெரியாமலே கஷ்டப்படுகிறார்கள். ராஜ ஸம்பத்து தேவ ஸம்பத்தைவிட மேலானதா?

6. பகவானது கைங்கர்யபரர்களான கருடன், ஹநுமான், ஹயக்ரீவன், ஆதிசேஷன், விஷ்வக்ஸேநர் முதலியவர்களைத் தைவபக்தியோடு பூஜிக்கவேண்டியது அவசியமா? ஸேவகன் யஜமானனிடம் சிலரை அழைத்துக்கொண்டுபோய் ஸதுபகாரம் செய்தாலும் ஸேவகன் யஜமானனாக இருக்கக்கூடுமோ?

7. ஸ்ரிய:பதியாகவும் சேஷசாயியாகவும் பகவான் இருந்துவருகிறான் என்றும், லக்ஷ்மி அவன் வக்ஷஸ்தலத்தில் இருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளதே. பூதேவியும் நீளாதேவியும் மேலே உதஹரித்த பகவானுக்குப் பார்யையாக அர்ச்சாவதாரங்களில் ஏற்பட்டிருக்கிறது. பகவானுக்குத் தேவிகள் எத்தனை? தேவஸ்தலங்களில் பகவானுக்கு விவாஹ பாணிக்ரஹண உத்ஸவங்கள் செய்வது முறையா?

8. ப்ராஹ்மண வைஷ்ணவர்கள் சாஸ்த்ர விதிப்ரகாரம் பரமாத்மாவின் க்ருபையையும் மோக்ஷத்தையும் உத்தேசித்து வேதசாஸ்த்ராப்யாஸமும், பிறகு தமது ஆசிரம ப்ரகாரம் அக்நிஹோத்ரம் அக்நிஷ்டோமம் அதிராத்ரவாஜபேயம் முதலிய க்ரதுக்களையும், ப்ரதிதினம் வைசுவதேவம் புராண காலக்ஷேபங்களையும் செய்யும் பக்ஷத்தில், க்ருஹ க்ருத்ய ஸம்ஸார யோகக்ஷேம க்ருஷி முதலியவைகளை ஜீவாத்மா இவ்வுலகில் மநுஷ்யரூபமாய் இருக்கும் வரையில் யார் செய்வார்கள்? எப்படி தேஹ ஸம்ரக்ஷணை செய்வது? அதற்குக் கலியுக தர்ம சாஸ்த்ராநுஷ்டானமாக ப்ரதிமநுஷ்யன் ஜீவிக்கிற முறையை விதிக்கவேணும். பகவானே யோகக்ஷேமங்களைக் காப்பாற்றிவருபவர் என்று எல்லாருக்கும் இருக்குமளவில் பூக்ருஷி எப்படி நடக்கக்கூடும்? மேலும் ஜகங்களின் அந்யோந்யப்ரீதி, வர்ணாசிரமப்ரீதி பிந்நமாகி விட்டனவே. ஒவ்வொருவரும் தமது லாபத்தையும் க்ஷேமத்தையும் உத்தேசித்துப் பாடுபடுவதே வெகு கஷ்டமாக இருந்துவருவதால் பரோபகாரம் எப்படி லபிக்கக்கூடும்?

9. ஸ்ரீபாஷ்யகாரர் சேஷாவதாரமென்றும், ஸ்ரீவேதாந்த தேசிகன் கண்டாவதாரமென்றும் சொல்லப்பட்டிருப்பதற்கு ப்ரத்யக்ஷ ப்ரமாணம் உண்டா?

பெருமான் திருவாராதந க்ரமத்தை ஸாமாந்ய ஸ்ரீ வைஷ்ணவர்கள் (லௌகிகர்கள்) செய்யும்படியாகத் தெளிவாய்த் தீபிகையில் ப்ரசுரம் செய்ய ப்ரார்த்திக்கிறேன்.

அக்ஷய ௵
தைமீ 26௳

தாஸன்,
இன்னம்பூர்-வீரவல்லி கோபாலஸ்வாமி ஐயங்கார்,
(எஞ்ஜினீர்.)

2

ஸ்ரீ. உப. வேதாந்த தீபிகை பத்ராதிபர்க்கு:—

இவ்வூரில் நாளது அக்ஷய ௵ மார்கழிமீ 23, 24—ம் தேதிகளில் தில்லியம்பூர் வித்வான் ஸ்ரீ. உப. கொ. வெங்கடாசார்ய ஸ்வாமி மூன்று உபந்யாஸங்கள் செய்தனர். முதல் நாள் "உத்க்ராந்தி தாம அரசாட்சி" (அதாவது, ஜீவன் சரீரத்தை விட்டபிறகு அடையும் நிலை) எனும் விஷயத்தைக் குறித்து ஸர்வமான்ய அக்ரஹாரம் பஞ்சாயத் கோர்ட்டிலும், அடுத்தநாள் மாலை 5-மணிக்கு மேல் பெண்பிள்ளை பாடசாலையில் "தர்மம்" என்னும் விஷயத்தைக் குறித்தும் உபந்யஸித்து, அன்று ராத்ரி 8-மணிக்கு மேல் 1-மணி வரையில் "குசேலோபாக்யாந"மும் செய்தார். ஷை உபந்யாஸங்களுக்கு, பள்ளிக்கூடத்து உபாத்யாயர்களும் இன்னும் பல ப்ரமுகர்களும் வந்திருந்தனர். அன்னோர், ஸ்வாமியின் உபந்யாஸங்களைக் கேட்டுப் பரவசமாயினர். நமது வேதாந்தத்திலுள்ள அரிய பெரிய விஷயங்களை, இவ்வளவு அழகாகவும், கேட்போர் மனத்தில் நன்கு பதியும்படிக்கும் போதநா சக்தி வாய்ந்த இம்மாதிரியான வித்வச் சிரோமணிகளும் இருக்கின்றனரோ என்றும், இதுவரையில் இந்த ஸ்வாமியின் உபந்யாஸத்தைக் கேட்கக் கிட்டாமலிருந்தது தங்கள் துரத்ருஷ்டமே யென்றும் பலவாறாகப் புகழ்ந்தனர். இம்மாதிரி பற்பல இடங்களில் மாதந்தோறும் நம் வேதாந்தத்தைப்பற்றி உபந்யாஸங்கள் நடைபெறுமாகில் அஜ்ஞாநாந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கும் ஜீவகோடிகளுக்கு ஜ்ஞாநோதயம் உண்டாவது திண்ணம் என்று அபிப்ராயப்பட்டனர்.

குற்றாலம்
10—1—27

தீ ஸ்ரீநிவாஸையங்கார்.
ஸர்வமான்ய அக்ரஹாரம், குற்றாலம்.

3

நமது முக்ய தர்மம்.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு:—

நாம் என்ன சாச்வதமான உபகாரத்தை நமது வைஷ்ணவ ஸமூஹத்திற்குச் செய்கிறோம்? இந்த லோகத்தின் ஸம்பந்தமான அந்நம் வஸ்த்ரம் தநம் இவைகளை ஸம்பாதித்துக்கொள்ள யோக்யதையை உண்டுபண்ணுவது தானா? ஜ்ஞாநமன்றோ உயர்ந்தது? இதை அநாதரித்து மற்றவைகளை மாத்ரம் கவனிப்பது வீண்தானே.

நமது சிறுவர்களுக்கு ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநத்தை உண்டுபண்ணாமல் நாம் நமது தேசத்தைப் பாழாக்கிவருகிறோம். இதைப் பார்த்துத் தேசாந்தரத்தைச் சேர்ந்தவர்

கள் நம்மைப் பரிஹஸிக்கிறார்கள். மிக்க அன்புடன் ச்ரமப்பட்டு செல்வத்தைத் தேடி வைக்கிறோம். அது எவ்வளவு தூரம் உதவும்? இதைப் பண்டிதர்கள் கொஞ்சமேனும் கவனிக்கவில்லையே!

நமது நிலைமையையும் ஸ்வரூபத்தையும் நிலைபெறும்படி செய்த ஸ்ரீபாஷ்யகாரருக்கோ, அல்லது அவருக்குப் பிறகு திருவவதரித்த ஆசார்யர்களுக்கோ நாம் எவ்வாறு க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கிறோம்? கேவலம் வார்ஷிக உத்ஸவங்களைச் செய்வதும், பெரிய ததீயாராதநங்களைச் செய்வதும் உத்தாரகமாகி விடுமோ? அவர்கள் அநுக்ரஹித்துள்ள க்ரந்தங்களை ப்ரவசநம் செய்து, அவைகளின் அர்த்தங்களை அநுபவத்தில் கொண்டுவந்து, உத்தரோத்தரம் அந்த ஆசார்யர்களின் அபிஸந்தி வ்ருத்தியாகி நிறைவேறும்படி நடந்தாலன்றோ சரியான க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் ஏற்படும்? அம்மாதிரியான நிஷ்பத்தி உண்டாக நமது சிறுவர்களுக்கு ஆசார்யர்கள் செய்தருளி இருக்கும் க்ரந்தங்களை உபதேசித்து, அவைகளின் பெருமைகளை அவர்கள் உணரும்படி அவர்களுக்கு அவைகளில் ஜ்ஞாநத்தை நாம் ஜநிப்பிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், நமது ஸித்தாந்தத்தில் ஊக்கமுள்ள வைதிக வித்வான்கள், தமது வைதுஷ்யம் தம்மிடத்திலேயே ஜீர்ணமாகி விடும்படி நடந்து வரலாமா? இந்த அம்சத்தை வித்வான்களெல்லாரும் கவனிக்க வேண்டும். கேவலம் உபந்யாஸாதிகளைச் செய்வதும், புராணங்களைப் படித்து ஸபா ரஞ்ஜகமாக அர்த்தம் சொல்வதும் போதமாட்டா. தாத்காலிகமாக அவை, கேட்கிறவர்களை ரஞ்ஜிப்பிக்கும்; சொல்லுகிறவர்களுக்கும் ஒரு க்யாதியை உண்டுபண்ணும். இவைகளா நமக்கு உத்திஷ்ட பலங்கள்? மநுஷ்யர்களிடம் காணப்படும் கெட்ட குணங்கள் மாறி, அவர்கள் ஆத்ம விஷயத்தில் ருசியைப் பெற்றுப் பரம நிச்ரேயஸத்தை அடைய ப்ரயத்னப்பட வேண்டுவது அன்றோ பலமாகும்? ஸ்வரூப ஜ்ஞாநத்தை ஏற்கெனவே கொஞ்சமாவது பெற்றிருக்குமவர்களுக்கு உபந்யாஸாதிகள் ப்ரயோஜநப்படுமே தவிர, ஸாமாந்ய ஜநங்களுக்கு அவை ப்ரயோஜநப்படமாட்டா. இக்காலமோ மஹத்தான ஆபத்காலம் போலத் தோன்றுகிறது. ஜீவநோபாயங்கள் ஸுலபங்களாக இல்லை. ஜீவநஹேதுக்காக ப்ராயேண எல்லாரும் பாஷாந்தரத்தையும் சில்ப நைபுண்யத்தையும் அப்யஸிப்பதில் காலம் முழுவதையும் போக்குகிறார்கள். அவர்களுக்கு அந்த ஜீவந ஹேது ப்ரயத்நத்தை அதிகமாகக் கெடுக்காமல், ஆத்ம ஜ்ஞாநத்தை நாம் உபதேசிக்க வேண்டும். அவர்களை முற்றிலும் அநாதரித்து விட்டால் ஜகத் நாசமாகிவிடும்.

'நாம் சொன்னால் யார் கேட்கிறார்கள்?' என்று வித்வான்கள் சொல்லலாம். அது உண்மையே. ஜீவநோபாயத்தைத் தேட ப்ரயத்நிக்குமவர்கள், ஸ்வல்ப ஜீவநம் ஏற்பட்டவுடன், அதை த்ருடப்படுத்திக் கொள்வதிலும் அதை அபிவ்ருத்தி செய்துகொள்வதிலுமே நோக்கமுள்ளவர்களாக இருக்கிறார்களே தவிர, 'ஏதோ ஒரு ஜீவநத்தைப் பகவான் ஸங்கல்பித்து விட்டான்; அதனால் த்ருப்தி அடைந்து, இனி நாம் ஆத்மார்த்தம் ப்ரயத்நம் செய்வோம்' என்று நினைப்பவர்களே இல்லை. இதை உத்தேசித்து அடியேன் ஒரு விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறேன். அது என்னவென்றால்:—ஒவ்வொருவனும், தன் தன் தர்மத்தை ஸ்வரூபஜ்ஞாந புரஸ்ஸரமாகப் பால்யத்திலேயே தெரிந்து கொள்ள வேண்டுமென்று எப்படியாவது ஒரு நிர்ப்பந்தத்தை நமது ஆசார்யர்களோ வேறு அதிகாரிகளோ ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். அப்படி நிர்ப்பந்தமொன்று ஏற்பட்டு விட்டால், பால்யத்தில் பலாத்காரமாகப் போதிப்பிக்கப்பட்ட போதிலும், வயது முதிர்ந்த பிறகு அந்த உபதேசம் ஸ்வரஸமாகவே பலனைக் கொடுக்கும். நமது பூர்வாசார்யர்களின்

க்ருஷி வீணாகாது. ஜகத்தும் க்ஷேமத்தை அடையும். ....

ஆசார்யர்களோ, ராஜப்ரதிநிதிகளோ, அல்லது மஹா ஜனங்கள் ஸதஸ்ஸாகக் கூடியோ, எப்படியாவது ஒரு மார்க்கத்தால், ஒவ்வொரு பிதாவும் தன் தன் புத்ரர்களை 6-வது வயது முதல் 11-வது வயது வரையில் வைதிக வழிக்கு உபயுக்தங்களான அம்சங்களைக் கட்டாயப்படுத்திப் போதிப்பிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு க்ராமத்திலும் இதற்காகத் தகுந்த பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும். இவைகளின் செலவுக்கு வேண்டிய தொகையை ஒவ்வொரு மனிதனிடத்திலிருந்தும் அவனவன் யோக்யதைக்குத் தகுந்தபடி வரிபோட்டு வஸூல் செய்யவேண்டும். அப்படிச் சேர்க்கப்படும் தொகையில், அந்தப் பாடசாலைகளின் உபயோகமான பிறகு அவசிஷ்டமாக இருக்கும் அம்சத்தை அத்யந்தம் விரக்தர்களாகவும் தேஹயாத்ரைக்கு எவ்வித ஸஹாயமும் அற்றிருக்கும் ஜ்ஞாதாக்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும். இம்மாதிரியாக சில வ்யவஸ்தைகள் ஜர்மெனி தேசத்தில் நடைபெற்று வருகின்றனவாம். அம்மாதிரி ஏன் நமது தேசத்தில் நடத்தக் கூடாது? இதை எல்லாரும் கவனித்து ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தாலொழிய நமக்கு ச்ரேயஸ் என்பதே ஏற்படாது. பெரியோர்களெல்லாரும் இந்த விஷயத்தை நன்றாக ஆலோசிக்கவேண்டுமென்று மிகுந்த வணக்கத்துடன் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீரங்கம் கோபாலஸாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

(1) ஐகசாஸ்திரிய மீமாம்ஸை.

ஸ்ரீ காஞ்சீபுரம் உ. வே. பிரதிவாதி பயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமியால் எழுதப்பெற்ற 'ஐகசாஸ்திரிய மீமாம்ஸை' என்னும் கிரந்தம் ஒன்று கிடைக்கப்பெற்றோம். பூர்வமீமாம்ஸை என்றும் உத்தரமீமாம்ஸை அல்லது சாரீரக மீமாம்ஸை என்றும் சொல்லப்படும் இரண்டு சாஸ்திரங்களும், இரண்டு பாகங்களாக அமைக்கப்பெற்று, ஒரே சாஸ்திரமென்று மனு முதலிய ரிஷிகளாலும் அவர்களின் அபிப்ராயத்தைச் செவ்வனே கண்டறிந்த பிராசீன ஆசாரியர்களாலும் நாளதுவரை அங்கீகரிக்கப்பட்டு வருகின்றதென்னும் விஷயத்தை ஸாதகபாதக யுக்திகளைக் கொண்டு பரக்க விசாரித்து ஒரே சாஸ்திரமென்பதை அந்த ஸ்வாமி இப்புஸ்தகத்தில் விஸ்தாரம் செய்திருக்கிறார்.

பூர்வமீமாம்ஸைபால் கேவல கர்மங்களைமட்டும் சொன்னால் இவைகளால் ஆராதிக்கப்பட வேண்டிய தேவதை எது என்றும், அப்படியே உத்தரமீமாம்ஸையில் பிரம்மஸ்வரூபத்தையும் அதன் உபாஸநத்தையும் வெளியிட்டால் அதற்கு அங்கமான கர்மங்கள் எவை என்றும், பரஸ்பராகாங்க்ஷை சாந்தமாகாமலிருப்பதால் இரண்டையும் சேர்த்துச் சொல்லில் அவ்வாகாங்க்ஷை சாந்தமாய் மீமாம்ஸா சாஸ்திரம் ஸர்வகர்மஸமாராத்யனை எம்பெருமானுடைய உபாஸநத்தைப் போதிக்கின்றது என்கிற ரீதியில் "ஸாபேக்ஷாணாம் வாக்யாநாம் ஏகவாக்யதா" என்கிறவாக்ய லக்ஷணம்

பொருந்த ஒரே சாஸ்திரமெனவேண்டும் என்றும், பிரம்மஸூத்திரத்தில் அநேகவிடங்களில் ‘உக்தம்’ ‘உக்தம்’ (ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது) என்று பூர்வ மீமாம்ஸையிலிருக்கும் யுக்திகளைச் சாஸ்திராந்தரத்திலிருந்து உதஹரிக்கும் காலத்தில் இன்ன விடத்தில் இன்னுரால் கூறப்பட் டிருக்கிறது என்று சொல்லவேண்டியிருக்க, அதைவிட்டுத் தம் கிரந்தத்திலேயே முதலில் தாம் சொன்ன விஷயத்தை மேல் தாமே அநுவதிக்கும் ரீதியில் அநுவதிப்பதால் இரண்டும் ஒரே சாஸ்திரமானுலொழிய இப்படி அநுவதிப்பது பொருந்தாததாதலாலும் ஐக சாஸ்திரியம் ஸித்தம் என்றும், இவ்வாறு பல டடிகளில் பிராசீன கிரந்தங்களிலிருக்கும் யுக்திகளைக் கொண்டும் ஸமயோசித சில யுக்திகளைத் தாமாகவே கல்பித்தும் சாஸ்திரைக்யத்தை ஸமர்த்தித்திருக்கிறுர்.

இதில் பிராசீனமான சுருத பிரகாசிகை முதலியவற்றில் காணும் ரீதியில் பூர்வ பக்ஷத்தை உத்பாவனம் பண்ணி ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதுடன், ஆங்காங்கு பிரஸக்தி வரும் ஸமயத்தில் பிறர் நவீனமாக என்னென்ன யுக்திகளால் தம் கொள்கையை வலுப்படுத்துகின்றுர்களோ, அவை யாவையும் தகுந்த யுக்திகளால் கண்டிக்கு மவஸரத்தில் அவ்வெதிரிகளின் கூடஸ்தர்களான சங்கராசாரியர் முதலியோர்களின் கிரந்தங்களைக் கொண்டும் அவர்களின் கொள்கை தவறென்று விளக்கிக்காட்டியிருப்பது குறிப்பிடத் தகுந்தது.

இவ்வாறு நவீனர்கள் சொல்லும் யுக்தியாபாஸங்களை விசாரித்துக் கண்டிக்குந் தருணத்தில் பூர்வ மீமாம்ஸையின் கடைசியில் ஸூத்திர ஏக தேசாவ்ருத்தி சாஸ்திரம் முடிந்ததற் கடையாளமா அல்லது சாஸ்திரம் முடிவுபெற வில்லை யென்பதற் கடையாளமா வென்று பராமர்சிக்கத் தொடங்கி, அநேக மஹரிஷிகளின் சிரௌத ஸூத்திரங்களையும் க்ருஹ்ய ஸூத்திரங்களையும் ஆராய்ந்து, அவைகளில் ஸூத்திராவிருத்திக்கோ அல்லது ஸூத்திர ஏகதேசாவிருத்திக்கோ அநுகதமான ஓர் காரணம் குறிப்பிட முடியாமலிருப்பதைச் சொல்லி, ஸாங்கிய ஸூத்திரத்தில் மட்டும் அத்யாயந் தோறும் கடைசியில் ஏகதேசாவிருத்தியையும் கடைசி அத்யாயத்தில்மட்டும் ஸம்பூர்ண ஸூத்திராவிருத்தி யிருப்பதையும் காட்டி, அந்த ரீதியில் பிரம்மஸூத்திரக்காரர் பிரவர்த்தித்திருப்பதாக அங்கீகரித்து, அதை யநுசரித்தே ஜைமினியும் தன் பூர்வமீமாம்ஸையின் கடைசி அத்தியாயத்தின் முடிவில் ஸூத்திர ஏகதேசத்தை ஆவிருத்தித்திருப்பது பிரம்ம ஸூத்திரத்தின் முதல் இரண்டு மூன்ருவது அத்யாயங்களின் கடைசியிலிருக்கும் ஏக தேசாவிருத்திபோல் சாஸ்திரம் முடிவு பெறவில்லை யென்பதற்கே அடையாளமாகுமென்பதால், இந்நூலாசிரியர் இவ்விஷயத்தை வெளியிட வெகு கிரந்த பரிசிரமம் செய்திருக்க வேண்டுமெனச் சொல்வது மிகுதியாகாது.

கடைசியில் முமுக்ஷுக்கள் யாவருக்கும் அத்யயனம் வேண்டியிருப்பதாலும் பிரமசரியம் அவசியமானதாலும் அவ்வத்தியயன தர்மங்களும் கிரஹஸ்த பிரம்மசாரி ஸாதாரணமான சில தர்மங்களும் பூர்வமீமாம்ஸையில் விசாரிக்கப்படுகின்றபடியால், அத்யயனம் செய்ததும் பூர்வமீமாம்ஸா விசாரம் செய்யாமலேயே வேதாந்த விசாரம் செய்யலாமென்பவர்களும் விதியில்லாமல் பூர்வமீமாம்ஸா விசாரம் செய்யவேண்டியதாயிற்று என்றும், பூர்வோத்திர மீமாம்ஸைகளின் கிரம நியமத்தை ஸாதிக்குமிடத்தில் கூறியுள்ளது குறிப்பிடத் தகுந்த யுக்திகளில் ஒன்ருகும்.

இப்படிப்பட்ட இக்கிரந்தம் சாஸ்த்ராந்தர பரிசயமில்லாமல் ஸ்ரீபாஷ்யத்தில் ஸாமாந்ய பரிசயமுள்ளவனுக்கு எளிதில் தெரிந்துகொள்ளுமாறு அழகிய நடையில் எழுதப் பெற்றிருப்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ஓர் லாபமென்றே கருதவேண்டும்.

தோ. வேணுகோபாலாசார்யர்.

(2) ஸ்ரீமத் வேதாந்த தேசிகர்.

இப்பெயர் பூண்டுள்ள ஒரு சிறிய புஸ்தகம் நாம் வரப்பெற்ருேம். ஸ்ரீ. உப. ஸ்ரீரங்கம் பி. எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்காரால் இப்புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. நமது ஆசார்யராகிற ஸ்ரீவேங்கடநாதருடைய திவ்ய சரித்ரத்தை இந்த ஸ்வாமி எவ்வித லோபமும் இன்றிக்கு எளிதான தமிழ் நடையில், படிப்பவர்களுக்கு ரஞ்ஜகமாக எழுதி இருக்கிறுர். இதன் விலை அணு 2. இதை அபேக்ஷிப்பவர்கள், ‘ஸ்ரீ. பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் 9, மாரிசெட்டித் தெரு, மந்தைவெளி மயிலாப்பூர்’ என்னும் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ :

உபந்யாஸங்கள்.

ஸ்ரீ. உ. ப. வித்வான் தில்லியம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி, சென்ற மார்கழி மீ 14, 15, 17உ களில் கும்பகோணம் பச்சையப்ப முதலி தெரு, 49 நெ. க்ருஹத்தில் மூன்று உபந்யாஸங்கள் செய்தார். அக் காலங்களில் ஸ்ரீ. உப. கெ. ஸ்ரீநிவாஸ பாட்டாசார்ய ஸ்வாமி அக்ராஸநத்தை வஹித்தார். உபந்யாஸ விஷயங்கள்:—

1. குசேலோபாக்யாநம்.
2. அம்பரீஷ சரித்ரம்.
3. ருக்மணீ கல்யாணம்.

நாச்சியார் கோவிலிலும், டிஸம்பர் 21, 22, 23உ களில் ருக்மணீ கல்யாணத்தைப்பற்றி உபந்யாஸம் நடந்தது.

விஜ்ஞாபநம்.

(1) ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் பழைய ஸம்புடங்களுள் பின் குறிக்கப்பட்டுள்ள ஸஞ்சிகைகள் தவிர வேறு ஸஞ்சிகைகள் இல்லை:—14-வது ஸம்புடத்தில் 7 முதல் 12-வரையிலும், 16-வது ஸம்புடத்தில் 1-முதல் 12-வரையிலும் உள்ள ஸஞ்சிகைகளே.

(2) இவ்வருஷத்தில் புதிதாய் ஸ்ரீ ஸபையைச் சேர்ந்துள்ள அநேக சந்தாதாரர் களுக்கு இவ்வருஷத்திய முதல் ஸஞ்சிகை அனுப்பப்படவில்லை. அந்த ஸஞ்சிகை கையில் இல்லாததே அதற்குக் காரணம். அவர்கள் விஷயத்தில் இவ்வருஷத்திய சந்தாவை அணு 4, குறைவாக (அதாவது ரூ. 2-12-0 ஆக) நிர்வாஹ கமிட்டியார் ஏற்படுத்தி இருக்கிறார்கள். 2-வது 3-வது ஸஞ்சிகைகளும் இப்பொழுது கையில் இல்லையாதலால், இனிச் சேரும் சந்தாதாரர்களுக்கு 4-வது ஸஞ்சிகை முதல் தான் அனுப்பப்படும். அவர்களிடமிருந்தும், அனுப்பப்படாத ஸஞ்சிகைகளுக்கு ஸஞ்சிகை 1-க்கு அணு 4 வீதம் குறைத்துக்கொண்டே சந்தா வஸூல் செய்யப்படும். ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம் ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம் இந்த இரண்டு க்ரந்தங்களும் புஸ்தக ரூபமாக வெளியாகிறபடியால், அவைகளுக்குக் குறைவு நேராமல், 2, 3 ஸஞ்சிகைகளில் வெளிவந்திருக்கும் அவைகளின் முதல் 16 பக்கங்கள் இனமாகக் கொடுக்கப்படும்.

3. கீழ் குறிக்கப்பட்டுள்ள புஸ்தகங்கள் ஸ்ரீ தீபிகை ஆபீஸில் விலைக்கு அகப்படும்:—

1. ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸார ஸங்க்ரஹம் (தமிழ் உரையுடன்) 0—8—0
2. நம்மாழ்வாரின் வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும் 0—4—0
3. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ் மொழிபெயர்ப்புடன்) 0—14—0
4. ஸ்ரீ பரமபத ஸோபாநம் 0—8—0

15—2—27. | கே. டி. ஸுந்தர ராஜாசார்யர்.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

1927	மார்ச்	14௳	அக்ஷய	பங்குனி	1-௳	தி.	ஏகாதசி வ்ரதம். மீந சுக்ல த்வாதசி திதி- மீந ஸங்க்ரமணம்.
...	,,	17	,,	,,	4	ஞா.	அதிதி
,,	,,	18	,,	,,	5	வெ.	பூர்ணிமா திதி, பங்குனி உத்திரம்
,,	,,	29	,,	,,	16	செ.	ஏகாதசி
,,	,,	31	,,	,,	18	வி.	த்ரயோதசி சதுர்த்தசி திதிகள்
,,	ஏப்ரல்	1	,,	,,	19	வெ.	அமாவாஸ்யை
,,	,,	2	,,	,,	20	ச.	சாந்த்ர ஸம்வத்ஸராரம்பம்
,,	,,	10	,,	,,	28	ஞா.	ஸ்ரீ ராம நவமி
,,	,,	12	,,	,,	30	செ.	மீந சுக்ல ஏகாதசி

1927	ஏப்ரல்	13௳	ப்ரபவ	சித்திரை	1௳	பு.	மேஷஸங்க்ரமணம்	29-53 ஸூர்யதிதி

ஸ்ரீ:

[illegible]

பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]

மத விஷயமான ஆக்ரஹம்

இந்த லோகத்தில் மத விஷயமான ஆக்ரஹம் பஹுகாலமாகப் பலவிடங்களில் ஜநங்களுக்குப் பெரிய தீமைகளை விளைவித்திருக்கின்றது என்பது பூலோக சரித்ரத்தைப் பராமர்சிப்பவரெல்லாருக்கும் புலப்படும். பாச்சாத்ய தேசங்களில் பழைய காலத்தில் கிருஸ்துவ மதஸ்தர்களுக்குள் நடைபெற்ற க்ரௌர்யங்களும், இத்தேசத்தில் துருஷ்கர்கள் இதர மதஸ்தர்களுக்குச் செய்த அக்ரமங்களும், ஹிந்து மதஸ்தர்கள் அநேக உட்பிரிவு அடங்கியுள்ள தங்களுக்குள் பரஸ்பரம் செய்துகொண்ட அத்யாஹிதங்களும் யாரால் மறக்கக் கூடியவை? கண்ணைப் பிடுங்குவதும் உயிருடன் தீயில் இட்டு எரிப்பதும் கத்தியால் வெட்டுவதும் தைவம் ஸம்மதித்த கார்யங்களாகவே எண்ணப்பட்டு வந்தன. இக்காலங்களிலும் அவை முழுவதும் சாந்தமாகி விடவில்லை. இவ்விதம் ஸகல மனிதர்களிடமும் ஸகல தேசங்களிலும் காணப்படும் துராக்ரஹத்திற்குக் காரணம் என்னவென்பதையும், அந்தத் துராக்ரஹத்தை நிவ்ருத்தி செய்ய எவை தகுந்த உபாயங்கள் என்பதையும் பராமர்சிக்கும் நிரூபகர்கள், பஹு ப்ரகாரமாகத் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளுள் ஒன்று, இக்காலத்திய சில வித்வான்களால் ஆமோதிக்கப்பட்டு வருகிறபடியால், அதைப் பற்றி இவ்விடத்தில் ஸ்வல்ப விசாரம் செய்வது ஸங்கதமாகும்.

அவர்கள் சொல்வதாவது:—'மநுஷ்யர்களுக்கு இளம் வயதில் எவை எவை போதிப்பிக்கப்படுகின்றனவோ, அவையெல்லாம் அவர்களுடைய புத்தியில் த்ருடமாகப் பதிகின்றன வென்பது அநுபவ ஸித்தம். போதிப்பவன் ஸமர்த்தனாக இருக்கும் பக்ஷத்தில், போதிக்கப்படும் விஷயம் அஸாதுவாக இருந்தபோதிலும் அந்தப் போதநத்திற்குப் பாத்ரமாகும் பாலர்களுடைய மநஸ்ஸில் அது ஸாதுவென்றே தோன்றும்படி செய்வது அஸாத்யமன்று. ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தாலோ அல்லது தமக்கு இயற்கையாயுள்ள ஸாத்விக

பாவத்தாலோ, இங்குமங்கும் இரண்டொருவர் அம்மாதிரியான போதநத்திற்கு வசப்படாமல் மீறி வரலாம். ஆனால், ப்ராயேண ஜநஸாமாந்யம் பால்யத்தில் கற்றதையே தர்மமென்றும் ந்யாய்யமென்றும் நினைத்து வருகின்றது. மத அபிநிவேசமுள்ளவர்களுக்குள் காணப்படும் துரக்ரஹிகளெல்லாரும் அநேகமாக இம்மாதிரியான வழியிலேயே பழக்கப்பட்டவர்கள். பால்யத்தில் மத விஷயத்தைப் பற்றி எவ்வித போதநங்களையும் செய்யாமலே கேவலம் லௌகிக ஜ்ஞாநத்தின் வ்ருத்திக்குக் காரணமாயுள்ள வித்யையை மாத்ரம் சிறுவர்களுக்குக் கற்பிக்கிறது என்றும், வயது முதிர்ந்த பிறகே மத விஷயங்களில் ப்ரவேசத்திற்கு அவகாசம் கொடுக்கிறது என்றும் ஒரு நியமத்தை நாம் ஏற்படுத்தி அதன்படி அநுஷ்டித்து வந்தால் இப்பொழுது காணப்படும் துராக்ரஹம் குறைவடையும்; காலக்ரமேண பூர்ணமாகவும் சாந்தமாகிவிடும்' என்பது தான்.

இந்த யுக்தி ந்யாயத்திற்கும் அநுபவத்திற்கும் விருத்தமாக இருக்கின்றது என்பது நமது அபிப்ராயம். பால்யத்தில் எதை நாம் உபதேசிக்கிறோமோ அதுவே த்ருடமாக மநஸ்ஸில் பதிவு அடைகின்றது என்பது உண்மையே. ஆனால், பால்யத்தில் மத விஷயமாகச் செய்யப்படும் உபதேசமெல்லாம் முதிர்ந்த காலத்தில் ஆக்ரஹமாகப் பரிணமிக்கின்றது என்பது உண்மையன்று. இளம் வயதில் நாம் ஆக்ரஹத்தை உபதேசித்தால் அது ஆக்ரஹத்தையே விளைவிக்கும்; ஆக்ரஹத்தை உபதேசியாமல் ஸாத்விகத் தன்மையைப் போதிப்பித்தால் அது ஸாத்விக ஸ்வபாவத்தையே வ்ருத்தி செய்யும்.

"[illegible]"

ஆகையால், ஆக்ரஹத்தை நசிப்பிக்க முயலுகிறவர்கள், பால்யத்தில் ஸம்பவிக்கும் ஸம்ஸர்க்கத்தையும் உபதேசத்தையும் பரிஷ்கரிக்கவேண்டுமே தவிர, மத விஷயமான உபதேசத்தையே நிவ்ருத்திக்கவேண்டும் என்று சொல்வது யுக்தியுக்தமாகாது.

அன்றிக்கே, ஒருவன் ஆக்ரஹியாகவும், மற்றொருவன் சாந்தனாகவும் இருக்கிறான் என்பது, பெரும்பாலும் ஜந்மாந்தர வாஸனையைப் பொருத்திருக்கின்றது.

"இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ"

இந்த்ரிய விஷயங்களில் ஜனங்களுக்கு ஜநிக்கும் அநுபவேச்சையானது ப்ரக்ருதி வாஸனையால் அவர்ஜநீயமாக ஸம்பவிக்கின்றது என்று ஸ்ரீகீதாசார்யன் அநுக்ரஹித்திருக்கிறான். அந்த இச்சை ப்ரதிஹதமானால், அவர்ஜநீயமாக

த்வேஷம் ஜநிப்பதும் அந்த வாஸனையின் கார்யமே. ஆகையால், அந்த வாஸனையின் பலத்தைக் குறைக்க எது உபாயமோ அதைச் செய்தால் துராக்ரஹங்கள் குறைவுபடுமே தவிர, மதவிஷயங்களையே போதிப்பிக்காமல் நிறுத்துவதால் அது குறைவுபடுமென்று சொல்வது ஆலோசனை செய்யாமல் சொல்லும் வார்த்தையே ஆகும்.

அநுபவத்தைப் பார்த்தாலும், பால்யத்தில் தைவபக்தி முதலியவற்றை உபதேசம் செய்யாமல் நிறுத்துவது நன்மையின் பொருட்டு ஆகாது என்பது விளங்கும். தைவ பக்தியும் பாப பயமும் லோக ஸ்திதிக்கு அவச்யம் அபேக்ஷிதங்கள். அவை இல்லாத இடங்களில், ஜநங்கள், பரஸ்பரம் ஸௌஹார்த்தம் பொருந்தினர்களாகவாவது ஸுகத்தை அநுபவிக்கிறவர்களாகவாவது காணப்படவில்லை. இப்பொழுது ஜநங்கள் அதிகமாகத் திருடாமலும் வேறு அதர்மங்களில் ப்ரவ்ருத்திக்காமலும் இருப்பது தைவத்தினிடத்தில் இருக்கும் பயத்தினாலும் விச்வாஸத்தினாலுமே. அம்மாதிரியான பயமே இல்லாமல் போய்விட்டால், ராஜாங்கத்தின் சட்டம் மாத்திரம் திருட்டுப் புரட்டுக்களை அடக்கி விடுமென்பது ஸாத்யமில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு போலீஸ்காரன் காவல் இருந்தாலும் ராஜாங்கத்திற்குக் கோசரமாகாமலே கணக்கற்ற மோசங்கள் நடைபெறக் கூடும். தைவமென்று ஒன்று உண்டு என்னும் ஜ்ஞாநமே இல்லாமல் வர்த்தித்துவரும் காட்டு மனிதர்களிடம் கணக்கற்ற துக்க ஹேதுக்கள் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட கஷ்டங்களைத் தடுத்து ஜநங்களுக்கு ச்ரேயஸ்ஸை ஜநிப்பிக்கப் பரமோபகாரகமாயுள்ள தைவ ஜ்ஞாநத்தை நாம் பாலர்களுக்கு உபதேசிக்கக் கூடாதென்று ஒரு நியமத்தை ஏற்படுத்திக் கொண்டால், நாமும் காட்டு மனிதர்கள் போலக் கஷ்டப்படும்படி ஸம்பவிக்குமே ஒழிய, ஸாத்விகத் தன்மை வ்ருத்தியாகுமென்று சொல்ல முடியாது. பால்யத்தில் உபதேசிக்கப்படாத விஷயம் வயது முதிர்ந்த பிறகு தானாகவே ப்ரகாசிப்பது துர்லபம்; அப்படி ப்ரகாசித்தாலும், அது கார்யோபயோகி ஆகாது என்பது அநுபவ ஸித்தம்.

தவிரவும் ப்ரஜைகளின் ஸம்ரக்ஷணத்திற்கு ஈச்வரன் பரம காரணமாக இருக்கையிலும், அந்த ஸம்ரக்ஷணத்தை அந்த ப்ரஜைகளைக் கொண்டே அவன் செய்விக்கிறான் என்பது லோக ஸ்திதி. பாலர்கள் விஷயமாக மாதா பிதாக்கள் போன்ற பெரியோர்கள் அம்மாதிரி நிமித்தமாக ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகளின் தேஹ போஷணம் முதலிய தேஹ ஸம்பந்தமான உதவிக்கு அவர்கள் காரணமாவது போல, ஆத்ம ஸம்பந்தமான ச்ரேயஸ்ஸுக்கும் அவர்கள் காரணமாக வேண்டுமென்பது தான் ஈச்வரனுடைய இச்சை. ஆகையால், மாதா பிதாக்களெல்லாரும் தம்தம் ப்ரஜைகளுக்குத் தம் தம் சக்திக்கும் ஜ்ஞாநத்திற்கும் அநுகுணமாக ஆத்ம ஜ்ஞாநத்தைத்

தேடி வைப்பது அவச்யமே. அப்படி அவர்கள் செய்யாமல் இருக்கும் பக்ஷத்தில், அவர்களுக்குப் பெரிய தர்மலோபம் ஸம்பவிக்கும். இந்தக் காரணத்தைப் பார்த்தும் இக்காலத்திய நிரூபகர்கள் காண்பிக்கும் மார்க்கத்தை நாம் ஆமோதிக்கிறோமில்லை.

ஒன்று மாத்திரம் நாம் த்ருடமாகச் சொல்லத் துணிவோம். எந்த மதத்தை உபதேசித்த போதிலும், ஸாத்விகத்திற்கு விருத்தமான அம்சத்தைப் பரித்யஜித்து, ஸாத்விக பாகத்தை வற்புறுத்தி உபதேசிப்பதுதான் நமது தர்மமாகும். காம க்ரோதம் முதலியவற்றை வளர்க்கும் மார்க்கம் ஸர்வதா பரிஹரணீயம். அஹங்காரத்தில் ஸாத்விகாஹங்கார மென்று ஒன்று உண்டென்றும் அதை வ்ருத்தி செய்வது தோஷமாகமாட்டாது என்றும் சொல்பவர் ஜகத்தின் க்ஷேமத்தைத் தேடுபவரல்லர் என்பதே நமது நிச்சயம். விஷத்தில் ஸாது வென்றும் அஸாது வென்றும் இரண்டு அம்சங்கள் உண்டோ? நம்மால் கொண்டாடப்படும் தைவத்தினிடம் த்வேஷத்தைப் பாராட்டுபவர்களிடத்திலும் நாம் ஆக்ரஹம் கொள்ளாமல் இருப்பது தான் நல்ல குணம். அதனால் அந்தத் தைவம் நம்மிடத்தில் அப்ரீதியை அடையாது எவ்வித பாபமும் அதனால் நமக்கு ஸம்பவியாது. அசுபமான மதி, புருஷோத்தமனிடத்தில் உண்மையாகப் பக்தி செய்பவர்களிடம் ஒரு காலும் ஸ்பர்சியாதன்றோ?

* * *

சீன தேசத்து யுத்தம்

சில வருஷங்களாகச் சீன தேசத்தில், ஜனங்கள், துர்பிக்ஷத்தால் வருந்தினவர்களாய்க் கார்யா கார்ய விவேகத்தை இழந்து பரஸ்பரம் ஹிம்ஸையைச் செய்துகொண்டு மஹத்தான கஷ்டத்தை அநுபவித்து வந்தார்களென்று பத்ரிகைகளிலிருந்து எல்லாரும் அறிந்திருக்கலாம். இப்பொழுது அந்தக் கஷ்டம் உந்மஸ்தகமாகிப் பெரிய யுத்தமாகப்பரிணமித்துவிட்டது; ஸாது ஜனங்களுக்கு அளவற்ற துன்பத்தை விளைவிக்கின்றது. உயிர் நிச்சயமில்லாமலும் சொத்துக்கள் பத்ரமில்லாமலும், ஜனங்கள் வீடுவாசலை விட்டு காட்டுக்குள் ஓடி ஒளிகிறார்களாம். ஸைந்யங்கள் க்ராமாத் க்ராமம் போய், தாம் ஸந்திக்கும் ஜனங்களை, ஸ்த்ரீ பால வ்ருத்தர்களென்று பாராமல் கொன்று விடுகிறார்களாம். யுத்தத்தில் எவ்வித ஸம்பந்தமுமற்ற சில துஷ்டர்களும் கூட்டம் கூட்டமாகத் தமக்குத் தோன்றின விடமெல்லாம் போய் மஹத்தான அக்ரமங்களைச் செய்கிறார் களாம். மீன்கள் போல, அசக்தர்களைச் சக்தர்கள் ஹிம்ஸிக்கிறதும், அந்தச் சக்தர்கள் தங்களைக் காட்டிலும் பலிஷ்டர்களால் ஹிம்ஸிக்கப்படுகிறதும், இம்மாதிரியானக் கணக்கற்ற அவ்யவஸ்தைகளே எவ்விடத்திலும் காணப்படுகின்றனவாம். இந்த ஸ்திதி இன்னும் ஸ்வல்ப காலம் தொடர்ந்து நின்றால் தேசமே பாழாய்விடும் என்பதற்கு ஐயமில்லை.

சீன தேசமென்பது மிகப்பெரிய தேசம்; ஏராளமான ஜனத்தொகையை உடையது; நாகரிகத்திலும் சிறப்புப் பெற்றுள்ளது. ஸ்வல்ப காலத்துக்கு முன் வரையில் அதிலுள்ள ஜனங்கள் ஸாத்விகமான மார்க்கத்திலேயே நடந்து வந்ததுடன், ஸுபிக்ஷத்தால் ஸுகமாகவே ஜீவித்து வந்தார்கள். சில வருஷங்களாக, ஏதோ ஒரு விதி வசத்தால், அந்தத் தேசத்திலுள்ள சில ஜனங்கள், ராஜாவினிடத்தில் அப்ரீதி கொண்டு, ராஜாவின் அதிகாரத்தை அவனை விட்டு எடுத்து விடவும் தேசத்தில் குடியரசை ஸ்தாபிக்கவும் ப்ரயத்நித்தார்கள். அந்த ப்ரயத்நம் மற்றும் சில ஜனங்களுக்கு அநபிமதமாக இருந்தபடியால், ஜனங்களுக்குள் கலஹம் நேர்ந்தது. அது பல ப்ரகாரமாக வ்ருத்தி அடையவே, ராஜாதிகாரத்திற்கு ஆத்யந்திகமான ஹாநி நேர்ந்ததுடன், ஜனங்களுக்குள்ளும் இரு கக்ஷிகள் ஏற்பட்டு, இருவரும் பஹிரங்கமாகவே ஸைந்யங்களைச் சேர்க்கிறதென்றும், ஸ்தலங்களை ஆக்ரமித்துப்பிடித்துக் கொள்ளுகிறதென்றும், ஸந்திக்கு மிடங்களில் யுத்தம் செய்கிறதென்றும், இம்மாதிரியான பல கொடிய பர்யவஸானங்கள் ஸம்பவித்து விட்டன. கால தோஷத்தால் துர்பிக்ஷமும் சேர்ந்து, ஜனங்களின் கஷ்டத்தை வளர்த்தி விட்டது.

"யோஹலோஹமயா உக்ரா: காலாஸ்த்ராஸ்த்ரநவா: ।
வைராவஹா ஹவிஷ்யந்தி ஸர்வஸர்வமயேஷிண: ॥"

என்று ஸ்ரீபாரதத்திற் சொல்லி இருக்கிறபடி ப்ராயேண இம்மாதிரியான தசை எல்லாத் தேசங்களுக்குமே ஸம்பவித்தாலும் ஸம்பவிக்கலாம். எப்பொழுது எது நேருமென்று யாரால் சொல்லமுடியும்?

ஒரு தேசத்திற்கு இம்மாதிரியான துர்தசை ஸம்பவித்தால், பலிஷ்டர்களாகவும் தர்மிஷ்டர்களாகவுமுள்ள மற்றைத் தேசத்து ராஜாங்கத்தார்கள் செய்யவேண்டிய உபகாரம் என்னவென்றால், இரு கக்ஷிக்காரர்களையும் பரஸ்பரம் வதம் செய்துகொள்ளாமல் தமது பலத்தைக் கொண்டு அடக்கி, ந்யாயத்தை விசாரித்து, ந்யாயத்தில் இருக்கும் கக்ஷிக்காரர்களுக்கு உதவி செய்து, ராஜ்யத்தை யதா பூர்வம் ஸ்தாபிக்கவும் ஸாதுக்களுக்கு ஸம்ரக்ஷணத்தையும் துஷ்டர்களுக்கு நிக்ரஹத்தையும் ஏற்படுத்தவும் முயல்வதே. சீன தேசத்துக்கு ஸமீபத்தில் கீழ் பாகத்தில் ஜபான் என்னும் ஒரு பலமுள்ள ராஜாங்கம் நடைபெற்று வருகின்றது. தென் பாகத்தில் நமது இந்தியா தேசம் இருக்கின்றது. மேற்கிலும் வடக்கிலும் ரஷ்யா என்னும் ராஜாங்கம் இருக்கின்றது. இவர்களுள் ஜபானும் ரஷ்யாவும் ஸ்வதந்த்ரர்கள். இந்தியா பரதந்த்ரம். ஆனால் இந்தியாவை ஆண்டுவரும் இங்கிலீஷ்காரர்கள் ஸ்வதந்த்ரர்களே. இவர்கள் எல்லாருக்கும் சொந்தமாகச் சீன தேசத்தில் இரண்டொரு ஸ்தலங்கள் இருக்கின்றன. வ்யாபாரிகளாகவும் மதோபதேசம் செய்கிறவர்களாகவும் அவ்விடத்திற்குப் போகும் தேசாந்தரிகளுக்கு இந்த ஸ்தலங்

கள் தங்குமிடமாகும். அப்படி இப்பொழுது அநேக தேசாந்தரத்து ஜநங்கள் அவ்விடம் தங்கியிருக்கிறபடியால் அவர்களுக்கு ப்ரக்ருத க்ஷோபத்தால் எவ்வித தீங்கும் வாராதபடிக்கும், ஒரு கால் ஏதாவது தீங்கை அந்தக் கலஹக்காரர்கள் விளைவித்தால் அவர்களை அடக்குவதற்கும், சுற்றியுள்ள ராஜாங்கத்தார்கள் அந்த ஸ்தலங்களில் பெரிய ஸைந்யங்களைக் கொண்டுபோய் ஸ்தாபித்திருப்பதுடன், அகஸ்மாத்தாக யுத்தமே நேர்ந்தால் அதை நடத்துவதற்கு ஸந்நாஹம் செய்துகொண்டும் இருக்கிறார்கள். இது ஸம்பந்தமாக, நமது தேச பரிபாலநத்திற்கு அதிகாரிகளாயுள்ள இங்க்லிஷ் ராஜாங்கத்தாரால், நம்முடைய தேசத்திலிருந்து சில ஸைந்யங்கள் அவ்விடம் அனுப்பப்பட்டிருக்கின்றன. இவ்வளவு செய்திருப்பதெல்லாம் ந்யாய்யமே. இனி இந்த ஸைந்யங்களைக்கொண்டு இந்த ராஜாங்கத்தாரெல்லாரும் என்ன செய்யப்போகிறார்கள் என்பதில் தான் ந்யாயாபந்யாயங்களைத் தீர்மாநம் செய்யவேண்டும். நாம் கீழ் விவரித்திருக்கிறபடி, சீன தேசத்திற்கு மறுபடியும் முன்போல ஸ்வாதந்த்ரயத்தையும் க்ஷேமத்தையும் இவர்கள் ப்ரதிஷ்டை செய்ய முயல்வாரானால், இவர்கள் எல்லாரையும் தார்மிஷ்டர்களென்றே நாம் கொண்டாடுவோம். அப்படிச்செய்யாமல், ஏதாவது ஒரு வ்யாஜத்தை அவலம்பித்து யுத்தத்தில் ப்ரவ்ருத்தித்து சீன தேசத்து ஜநங்களிடமிருந்து ராஜ்யத்தை அபஹரித்துக்கொண்டு இவர்கள் அதைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளவும் தமது ராஜ்யத்தை அவ்விடத்தில் ஸ்தாபித்து அதனால் தமது ஸ்வஜநங்களுக்கு ஒரு வித நன்மையைப் பெறவும் முயன்றார்களேயானால், அது பெரியதொரு அதர்மமேயாகும். இப்படிப்பட்ட அதர்மம் ஒரு கால் நடைபெறுமோ என்னும் அதிசங்கை அநேக பெயர்களுடைய மநஸ்ஸில் உண்டு. இந்த இந்தியா தேசத்திலிருந்து ஸைந்யத்தை நமது ராஜாங்கத்தார் சீன தேசத்துக்கு அனுப்பியபொழுது அப்படி அனுப்புவது ந்யாயவிருத்தமென்றும் அதற்குத் தாம் ஸம்மதிக்கவில்லையென்றும் அநேக இந்தியர்கள் ஆக்ஷேபித்தார்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். அவ்வித ஆக்ஷேபங்களுக்கெல்லாம் இந்த அதிசங்கையே முதற் காரணம். தர்ம ஸ்தாபநத்திற்காகவே ஸைந்யம் அனுப்பப்பட்டிருக்கின்றது என்னும் ஜ்ஞாநம் அவர்களுடைய மநஸ்ஸில் த்ருடமாக ஏற்பட்டிருந்தால் அவர்கள் அம்மாதிரியான ஆக்ஷேபத்தையே செய்திருக்கமாட்டார்கள். யார் ஆக்ஷேபித்தாலும் ஆக்ஷேபிக்காவிட்டாலும் இச்சமயத்தில் நமது ராஜாங்கத்தார் அநுஷ்டிக்க வேண்டிய தர்மம் வ்யக்தமாகக் கிடக்கின்றது. அந்தத் தர்மப்படி அவர்கள் நடப்பார்களென்றே நாம் நம்புகிறோம்.

தயா ஹி—ப்ரக்ருத வராஉஸிஉ தஜ்ஜபாவமதஸ்ய ப்ரஹ்மண: ஸ்வ ஸங்கல்பக்ருத ஜகதுத்பத்தி ஸ்திதி விலயாதய:, 'ததைக்ஷத, பஹுஸ்யாம், ப்ரஜாயேய' இத்யாரப்ய 'ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:' இத்யாதிபி: பதை: ப்ரதிபாதிதா:। தத்ஸம்

மான ஸகல ஜகத்துக்கும் அந்த ப்ரஹ்மமே காரணம் என்று சொல்ல ஆரம்பித்து, 'அசேதநம் முழுவதற்கும் ப்ரஹ்மமே உபாதாந காரணம்' என்று முதலிற் சொல்லி, பிறகு, 'சேதந வஸ்துவுக்கும் அந்த ப்ரஹ்மமே காரணம்' என்று ப்ரதிபாதிக்கின்றது. இவ்வாறு 'ஜீவனுடன் கூடிய ஜகத் முழுவதும் ப்ரஹ்மத்தின் சரீரம்' என்பதை விளக்கி, கடைசியில், 'ப்ரஹ்மம் ஜகத்திற்கு ஆத்மா' என்பதைச் சொல்லி, 'ஆகையால், நீயும் அது தான்' என்று ச்வேதகேதுவைப் பார்த்துப் பிதா சொல்வதாக முடிக்கிறது.

இதில் இப்பொழுது நாம் விசாரிக்கவேண்டிய அம்சம் ஒன்றே. அதாவது:- 'இந்த உபநிஷத்திற் சொல்லப்படும் ப்ரஹ்மம் நிர்விசேஷமா ஸவிசேஷமா' என்பதுதான். அத்வைதிகள் நிர்விசேஷமென்றும் விசிஷ்டாத்வைதிகள் ஸவிசேஷமென்றும் சொல்லுகிறார்கள்.

இனி ஸ்ரீ க்ரந்தத்தை அநுஸரிப்போம்.

தயா ஹி............விஹந்யதே—['நீ அதுதான்' என்னும் வாக்யத்திலுள்ள 'அது' என்னும் பதம் ப்ரக்ருதத்தைப் பராமர்சிக்கின்றது. ப்ரக்ருதம் என்னவென்றால், 'ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஆரம்பித்து, 'ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:' என்பது வரையிலுள்ள பதங்களால் சொல்லப்படும் பகவத் ஸங்கல்பாதீநங்களான ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள். ஆகையால், 'அது' என்னும் பதத்திற்கு, 'தனது ஸங்கல்பத்தால் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யக்கூடிய ப்ரஹ்மம்' என்பது அர்த்தம். ஆகையால், இங்கு குறிக்கப்படும் ப்ரஹ்மம் ஸவிசேஷமே. தவிரவும், இந்த ஜகத்காரண வஸ்துவான ப்ரஹ்ம ஸம்பந்தமாயுள்ள வேறு ச்ருதிகளில் அநேக குணங்கள் ப்ரஹ்மத்துக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை என்னவென்றால்—ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஸர்வேச்வரத்வம், ஸர்வ ப்ரகாரத்வம், தனக்கு ஸமனாகவாவது அதிகனாகவாவது வேறு ஒருவனும் இல்லாமல் இருக்கும் தன்மை, ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம், ஸர்வத்தையும் ப்ரகாசிப்பிக்கும் தன்மை இவை முதலிய அளவற்ற மேன்மையை உடைய அஸங்க்யேய கல்யாண குணக் கூட்டங்கள். இன்னும் வேறு அநேக வாக்யங்களில் அபஹத பாப்மத்வம் முதலான ஹேய குண ராஹித்யமும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளெல்லாம் 'ப்ரஹ்மம் நிர்விசேஷம்' என்னும் பக்ஷத்திற்கு விருத்தங்கள்].

18669

ஸம்பந்திதயா ப்ரக்ருதாநாம் நிகிலதோஷா: ஸர்வஜ்ஞதா ஸர்வசக்தித்வ ஸர்வேச்வரத்வ ஸர்வப்ரகாரத்வ ஸமாப்யதிகநிவ்ருத்தி ஸத்யகாமத்வ ஸத்யஸங்கல்ப

ப்ரக்ருதபராமர்சிதச்சப்த:—ப்ரக்ருதத்தைப் பராமர்சிக்கும் "அது" என்னும் சப்தம். ப்ரக்ருதத்தைப் பராமர்சிக்கிறபடியால் குணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தையே அது குறிக்கின்றது என்பது குறிப்பு.

உதய விபவ விலயாதய:—ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலியவை. 'முதலிய' என்பதால், இந்த உபநிஷத்திலேயே சொல்லப்பட்டுள்ள அநுப்ரவேசம் நாமரூப வ்யாகரணம் இவை குறிக்கப்படுகின்றன.

ஸர்வஜ்ஞதா—எல்லாவற்றையும் அறியும் தன்மை. "ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்." (முண்டக உபநிஷத்)

ஸர்வசக்தித்வம்—ஸர்வ சக்தனாக இருக்கும் தன்மை. "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே." (ச்வேதாச்வதர உபநிஷத்)

ஸர்வேச்வரத்வம்—எல்லாவற்றிற்கும் ப்ரபுவாக இருக்கும் தன்மை. "ய ஈசேஸ்ய ஜகதோ நித்யமேவ நாந்யோ ஹேதுர் வித்யத ஈசநாய". (ச்வேதாச்வதர உபநிஷத்)

ஸமாப்யதிகநிவ்ருத்தி—ஸமனும் அதிகனும் இல்லாமல் இருக்கும் தன்மை 'ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" (சாந்தோக்யம்)

ஸத்யகாமத்வம்—நித்ய விபூதியுடன் கூடி இருக்கும் தன்மை. 'ஸத்ய' என்பதற்கு அமோகமான என்றும், 'காம' என்பதற்குக் காமனை (அல்லது இச்சை) என்றும் அர்த்தம் செய்யக்கூடும்; அப்பொழுது 'ஸத்யகாம' என்பதற்கு அமோகமான இச்சையை உடையவன் (அதாவது—அவன் இச்சிப்பதெல்லாம் உடனே நிறைவேறுகின்றன) என்று அர்த்தம் கிடைக்கும். ஆனால் அந்த அர்த்தம், அடுத்துவரும் 'ஸத்யஸங்கல்ப' என்னும் சப்தத்தால் ஏற்படுகிறபடியால், இதற்கும் அந்த அர்த்தம் சொல்வது நிஷ்ப்ரயோஜநமாகும். 'காம' என்னும் பதத்திற்கு இச்சிக்கப் படுபவை (காம்யந்த இதி காமா:) என்றும் அர்த்தம் செய்யக்கூடும். அதாவது-கல்யாண குணங்கள். அப்பொழுது 'ஸத்யகாம' என்பதற்கு ஸத்யமாயுள்ள கல்யாண குணங்களை உடையவன் என்று அர்த்தம் கிடைக்கும். ஆனால், வேறு சில குணங்கள் இவ்விடத்தில் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த அர்த்தம் ஒவ்வாது. ஆகையால் இந்த அர்த்தங்களை விலக்கி, போக்ய போகோபகரண போகஸ்தாந ரூபங்களான காமங்களை உடையவன் (அதாவது-நித்ய விபூதியை உடையவன்) என்று அர்த்தம் சொல்லப்படுகின்றது.

த்வ ஸர்வாவபாஸகத்வாத்யநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகணா: அபஹதபாப்மத்வாத்யா: ச்ருதிநிகர வாக்யாவகத நிர்தோஷ நிர்விசேஷதா ச ஸர்வேதத்விசேஷ விஹந்த்ரிதே ।

ஸத்யஸங்கல்பத்வம்—அப்ரதிஹதமான (அதாவது—தடையின்றி ப்ரவ்ருத்திக்கும்) ஸங்கல்பத்தை உடையவன். அவன் ஸங்கல்பிக்குமவை யெல்லாம் அப்ரதிஹதங்களாய்ப் பலிக்கின்றன.

ஸர்வாவபாஸகத்வம்—எல்லாவற்றையும் ப்ரகாசிப்பிக்கும் சக்தியுள்ளவன். "தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி." (கடோபநிஷத்.)

அநவதிகாதிசய—அளவற்ற மேன்மையை உடைய. அவனிடமுள்ள குணங்கள் ஒவ்வொன்றும் அளவற்ற மேன்மையை உடையவை; அப்படி அவனிடம் இருக்கும் குணங்களும் கணக்கற்றவை.

ஒரு வஸ்துவை ஜகத் காரணமென்று அங்கீகரித்தால், அப்படி காரணமாக இருப்பதற்கு இந்தக் குணங்கள் எல்லாம் அபேக்ஷிதங்கள். ஆகையால், ஜகத்காரண வஸ்துவைக் குறிக்கும் 'தத்' என்னும் பதம் இந்தக் குணங்களுடன் கூடியதாகவே இருக்கவேண்டும் என்பது குறிப்பு. இதே மாதிரி, அந்தக் காரண வஸ்துவினிடத்தில் கெட்ட குணங்கள் ஒன்றும் இருக்கக்கூடாது. அவை இல்லாமல் இருக்கும் தன்மையை 'அபஹத பாப்மா' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் சொல்லுகிறார்.

அபஹத பாப்மா—பாபம் என்றால் ஸுக்ருத துஷ்க்ருதங்கள். இந்த லோகத்தின் ஸம்பந்தமில்லாமல் இருந்துகொண்டு எந்தக் கர்மம் அநிஷ்டத்தை விளைவிக்கின்றதோ அது பாபம். ஆகையால் துஷ்க்ருதங்களெல்லாம் பாபங்கள். மோக்ஷத்தை இச்சிப்பவனுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலம் அநிஷ்டமாகையால், அப்படிப்பட்ட ஸ்வர்க்கத்திற்குக் காரணமாகும் ஸுக்ருதங்களும் முமுக்ஷுவுக்குப் பாபங்களேயாகும். 'அபஹத' என்பதற்குப் போக்கடிக்கப்பட்ட என்று அர்த்தம் சொல்லக்கூடும். ஆனால், போக்கடிக்கப்பட்ட பாபத்தை உடையவன் என்று சொன்னால், ஏதோ ஒரு காலத்தில் பாபம் அவனிடத்தில் இருந்தது என்று அர்த்தமாகும். அது ப்ரஹ்மத்திற்கு ஒவ்வாது. ஆகையால், 'அபஹத' என்பதற்கு 'ஒட்டாத' என்று அர்த்தம் சொல்லவேண்டும். ஒட்டாத ஸுக்ருத துஷ்க்ருதங்களை உடையவன் என்று ஆயிற்று. அதாவது-ஈச்வரனால் செய்யப்படும் புண்யபாபரூபமான கர்மங்கள் சுப அசுப பலங்களை விளைவிக்கமாட்டா; பாபம் செய்யப்பட்டபோதிலும், தன் பலத்தைக் கொடுக்காமல் இருக்கும்படி அதைத் தடுக்கும் ஒரு ஸ்வபாவ விசேஷம் ஈச்வரனிடம் இருக்கின்றது என்று சொன்னதாயிற்று. ஈச்வரன் பாபத்தைச் செய்வனோ? செய்யலாமோ? என்று ஒரு சங்கை உதிக்கலாம். அது அர்த்தமன்று. நமக்குப் பாபங்களாக இருக்கும் கர்மங்களை அவன் செய்ய நேரிட்டபோதிலும், அவை அவனுக்கு பல ப்ரதங்களாகா என்பதுதான் அர்த்தம். அந்த ஸ்வபாவத்தைத்தான்

அயமர்த்த:—ப்ரதமம் ஏகேந விஜ்ஞாதேந ஸர்வவிஜ்ஞாநம் ப்ரதிஜ்ஞாய, தஸ்ய காரணஸ்யைகஸ்யைவ ஸத்யதாம் ப்ரதிஜ்ஞாய, விகாரஜாதஸ்ய து அஸத்யதாம் ம்ருத்த்ருஷ்டாந்தேந உபபாத்ய, ஸத்யஸ்யைகஸ்யைவ ப்ரஹ்மண: 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்' இதி ஸஜாதீய விஜாதீய நிவ்ருத்தி: நிஸ்ஸஹேந நிர்விசேஷமேவ ப்ரதிபாதிதா। ஸாதநீயாதிப்ரகரணாந்தரகதவாக்யா

'அவஹத வாத்ஸவம்' என்று சொல்லுகிறார்கள். "அவஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோऽபிபாஸ:" என்று உபநிஷத்தில் பகவானுடைய தோஷங்களற்றதன்மை சொல்லப்பட்டிருக்கின்றது.

ஜகத்காரண வஸ்து எவ்வித குணமுமற்றது என்று சொல்வது இந்த உபநிஷத் வாக்யங்களுக்கெல்லாம் பொருந்தாது என்பது சொன்னதாயிற்று.

அயமர்த்த:........அவபோதநாத்—இதனால் இந்த உபநிஷத் வாக்யங்களுக்குச் சங்கர மதஸ்தர்கள் சொல்லும் அர்த்தம் விவரிக்கப்படுகின்றது. [அது என்னவென்றால்—உபநிஷத்தின் ஆரம்பத்தில் 'ஒன்றை அறிவதனால் எல்லாம் அறிந்ததாகிவிடும்' என்று ப்ரதிஜ்ஞை செய்திருப்பதனால், ஸகலத்திற்கும் காரணமாயுள்ள ப்ரஹ்மமாகிற வஸ்துவே உண்மையான வஸ்து என்று சொல்லப்பட்டதாகிறது. பிறகு மண் த்ருஷ்டாந்தத்தினால் 'காரண வஸ்துவே உண்மை, அதன் மாறுதல்களெல்லாம் பொய்' என்பது நிரூபிக்கப்படுகின்றது. பிறகு 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்' என்னும் வாக்யத்தால், 'அந்த உண்மையான ப்ரஹ்மம், ஸஜாதீயம் விஜாதீயம் ஆகிய ஸகல பேதமுமற்றது' என்று சொல்லப்படுகின்றது. இப்படி ஸகலவித பேதங்களும் நிராகரிக்கப்படுகிறபடியால் 'ப்ரஹ்மம் நிர்விசேஷமே' என்று ப்ரதிபாதிக்கப்பட்டதாகிறது. வேறு ப்ரகரணங்களில் காணப்படும் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம', 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் நிர்குணம் நிரஞ்ஜநம்', 'விஜ்ஞாநமாநந்தம்' இவை முதலான வாக்யங்களும் 'ஸதேவ ஸோம்ய' இத்யாதியான காரண வாக்யத்தால் ஏற்படும் ப்ரஹ்மத்தைச் சோதிக்கும் வாக்யங்களாகிறபடியால், 'அந்த ப்ரஹ்மம் எல்லா விசேஷங்களுக்கும் விருத்தமான ஸ்வரூபத்தை உடையது' என்பதையே தெரிவிக்கின்றன. அப்படி 'ஒரே விதமான ஸ்வரூபத்தை உடையது அந்த ப்ரஹ்மம்' என்பதைத் தெரிவிப்பதனால் அந்தப் பதங்களெல்லாம் ஒரே அர்த்தத்தைச் சொல்லவேண்டும் (அதாவது நிஷ்ப்ரயோஜநமாக வேண்டும்) என்பதும் இல்லை. வஸ்து ஒன்றாய் இருந்தபோதிலும், அந்த வஸ்துவைக் குறிக்கும் பதங்கள், 'அந்தப் பதங்களாற் சொல்லப்படும் விசேஷங்கள் எல்லாவற்றிற்கும் விருத்தமான ஸ்வரூபத்தை உடையது அது' என்பதை ஸ்தாபிப்பதால் அந்தப் பதங்களுக்கெல்லாம் ப்ரயோஜநம் உண்டு. ஆகையால் நிர்விசேஷமான ப்ரஹ்மமே இவ்விடத்திற் சொல்லப்படுகின்றது] இதுதான் இந்த உபநிஷத்திற்குச் சங்கரமதஸ்தர்கள் சொல்லும் அர்த்தம்.

ந்யபி 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம', 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் நிர்குணம் நிரஞ்ஜநம்', 'விஜ்ஞாநமாநந்தம்' இத்யாதீநி ஸர்வவிசேஷ ப்ரத்யநீகாகாரதாம் போதயந்தி। நசைகாகாரதாவபோதே பதாநாம் பர்யாயதா, ஏகஸ்மிந்நபி ஸ்ரூந: ஸர்வவிசேஷ ப்ரத்யநீகாகார ஸ்வரூபாவபோதநேந ஸர்வபதாநாமர்த்தவத்த்வாத்—இதி।

ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் ச்ருதிவாக்யங்களுள் காரணவாக்யங்கள் சில, சோதக வாக்யங்கள் சில. ஸதேவ ஸோம்ய என்னும் வாக்யம் காரண வாக்யம்; ஸத்யம் ஜ்ஞாநம் இத்யாதியான வாக்யங்கள் சோதக வாக்யங்கள். 'எல்லாவற்றிற்கும் காரணம் ப்ரஹ்மம்' என்பதைச் சொல்லும் வாக்யம் காரணவாக்யம்; அந்த வாக்யத்தால் ஏற்படும் ப்ரஹ்மம் எப்படிப்பட்டது என்பதைச் சோதிக்கும் வாக்யங்கள் சோதகவாக்யங்கள். இந்தச் சோதகவாக்யங்களுள் சில (நிர்குணம் நிஷ்கலம் இவை முதலியவை) வ்யக்தமாக நிர்விசேஷ ப்ரஹ்மத்தைச் சொல்வன போல இருக்கின்றன. மற்றும் சில (ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம முதலியவை) அவ்வளவு வ்யக்தமாக நிர்விசேஷத் தன்மையை வெளியிடாவிடினும் காரண வாக்யத்திற்கும் மற்றைச் சோதக வாக்யங்களுக்கும் அவிருத்தமாக இருக்க வேண்டுமாதலால், அவைகளும் நிர்விசேஷ பரங்களாகவே இருக்க வேண்டும் என்பது இம்மதஸ்தர்களின் கருத்து.

ஸஜாதீய விஜாதீய நிவ்ருத்தி—பேதங்கள் இருவகைப்படும் என்பது மேலே சொல்லப்பட்டிருக்கின்றது. (17-வது பக்கத்தைப் பார்க்க.)

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம—இந்த வாக்யம் தைத்திரீய உபநிஷத் ஆநந்தவல்லியில் இருக்கின்றது. இதற்கு ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயும் இருக்கும் ப்ரஹ்மம் என்பது பொருள். அதாவது—ப்ரஹ்மம் அஸத்யமன்று; அஜ்ஞாநமன்று; ப்ரஹ்மத்திற்கு அந்தமில்லை என்று சொன்னதாயிற்று சங்கர மதஸ்தர்கள் இம்மாதிரி அர்த்தம் சொல்லுகிறார்கள். இப்படி அர்த்தம் சொன்னால் தான் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்பது ஸித்திக்கும். இருக்கிறபடி அர்த்தம் சொன்னால், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஸத்யம் முதலிய குணங்கள் ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்படுவதுபோல ஆகும்; அது அவர்களின் கொள்கைக்கு விருத்தம்.

'இவ்வித எல்லா விசேஷணங்களும் ஒரே ஸ்வரூபத்தைப் போதிப்பவையாக இருந்தால், அவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சொன்னால் போதாதோ? மற்றவை நிஷ்ப்ரயோஜநங்களாக வன்றோ நிற்கின்றன?' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யக்கூடும். அதற்கு ஸமாதாநமாக அவர்கள் சொல்வதாவது—'எல்லா விசேஷணங்களும் ஒரே ஸ்வரூபத்தைப் போதிக்கின்றன என்பது உண்மையே; ஆனால், அவற்றுள் ஒவ்வொரு பதமும் தன் தன் எதிர்த்தட்டான விசேஷங்களை ஜ்ஞாபித்துக்கொண்டு 'அந்த விசேஷத்திற்கு

ஜைநதஜேஷழ। ஸைகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம் ஸர்வஸ்ய மித்யாத்வே ஸர்வஸ்ய ஜ்ஞாதவ்யஸ்யாபாவாத் நோபபத்யதே, ஸத்யத்வே ஏகஸ்ய ஜ்ஞாநேந ஸர்வஸ்ய ஜ்ஞாநம் ; கதிதம் ஸைகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம் ப்ரதிஜ்ஞா ஸர்வஸ்ய தத்காரகத்வே நைவ ஸித்யதி।

விருத்தமான ஆகாரத்தை உடையது ப்ரஹ்மம்' என்பதைச் சொல்லுகின்றது. ஆகையால், எல்லாப் பதங்களும் ப்ரயோஜநமுள்ளவைகளே' என்பதுதான். இந்த ஸமாதாநம், இவ்விடத்தில் 'நசைகாகாரதாவஸேயா' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படி அர்த்தம் சொல்லும் சங்கரமஸ்தர்கள், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம் என்னும் மூன்று பதங்களுக்கும் ஸாமாநாதிகரண்யம் உண்டு என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள், பல விசேஷணங்கள் ஒரே விசேஷ்யத்தை அவகாஹித்து நிற்பதும் அந்த விசேஷணங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் (அதாவது-அர்த்தங்கள) வேறுபட்டு இருப்பதும் ஸாமாநாதிகரண்யத்திற்கு முக்யமான லக்ஷணம். இவ்விடத்தில் மூன்று விசேஷணங்களும் ப்ரஹ்மமாகிற ஒரே விசேஷ்யத்தை அவகாஹித்து நிற்கின்றன என்பது ஸ்பஷ்டம். அவைகளின் ப்ரவ்ருத்தி நிமித்தங்களும் வேறுபட்டு நிற்கின்றன என்பதை நிரூபித்துவிட்டால், ஸாமாநாதிகரண்ய லக்ஷணம் இவ்விடத்தில் அந்வயித்துவிடும். ஜ்ஞாபிக்கப்படும் எதிர் தட்டான அர்த்தங்கள் (அதாவது-ப்ரதியோகி விசேஷங்கள்) ப்ரவ்ருத்தி நிமித்தங்களாகிறபடியால், ப்ரதியோகிவிசேஷங்கள் வேறுபட்டு நிற்கவே ப்ரவ்ருத்தி நிமித்தங்களும் பிந்நங்களாக இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டதாகிறது.

இந்த 'ஸத்யம்ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்னும் வாக்யத்திற்கு நமது ஆசார்யர்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறார்கள் என்பதைப் பிறகு விசாரிப்போம்-

நிஷ்களம்-நிரவயவம் (அவயவமற்றது; நிஷ்க்ரியம்-க்ருதக்ருத்யம் (அதனால் செய்யப்படவேண்டியது ஒன்றுமில்லை); நிர்குணம்-குணமற்றது; நிரஞ்ஜநம்-அஸம்ஸ்ருஷ்டஸ்வபாவம் (ஒட்டாத ஸ்வபாவத்துடன் கூடினது.]

விஜ்ஞாநம் ஆநந்தம்—ஜ்ஞாநஸ்வரூபம் ஆநந்த ஸ்வரூபம்.

நைதஜேவம்......ஸித்யதி—இது சங்கரமதஸ்தர்களுக்கு விசிஷ்டாத்வைதிகள் சொல்லும் ஆக்ஷேபம். [அது அப்படியன்று. ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம் (ஒன்றை அறிவதனால் எல்லாம் அறிந்ததாகிவிடும்) என்பது உங்கள் மதத்தில் எப்படி ஸித்திக்கும்? நீங்களோ 'எல்லாம் பொய்' என்று சொல்லுகிறீர்கள். எல்லாம் பொய்யானல் அறியப்படவேண்டிய வஸ்து இல்லாமையால் ஸர்வவிஜ்ஞாநம் (எல்லாவற்றையும் அறிவது) என்பதே ஏற்படாது. இல்லாவிட்டால், ஜகத் ஸத்யமென்றாவது அல்லது ப்ரஹ்மம் பொய்யென்றாவது சொல்லவேண்டி வரும். அது உங்களுக்கு அநிஷ்டம். எங்கள் மதத்திலேயோ வென்றால், ஜகத் முழுவதும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தா

அத உத்தரம்—ஶ்வேதகேதும் ப்ரத்யாஹ "ஸ்தப்தோஸி உத தமாதேஶம் அப்ராக்ஷ்ய? இதி—(வரிஷ்டோஸி இவ லக்ஷ்யஸே, தம் ஆசார்யாத் ப்ரதி ததாதேஶம் ப்ருஷ்டவாநஸி ? இதி)।"

யிருக்கிறபடியால், ஜகத் முழுவதும் ஸத்யம்; ஆகையால ஸர்வவிஜ்ஞாநம் என்பது ஸித்திக்கும்.]

இந்த ஆக்ஷேபத்தின் ப்ரக்ரியை பின்வருமாறு:—'ஒரே வஸ்துதான் இருப்பது, மற்றவை ஒன்றும் இல்லை' என்று அறிவதுதான் 'ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்' என்பதற்கு அர்த்தம் என்று சொன்னல், அப்படி அர்த்தமாவதற்கு 'ஏக விஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்' (ஒன்றை அறிவதனல் எல்லாம் அறிந்ததாகிவிடும்) என்று சொல்லக்கூடாது; 'ஏகவிஜ்ஞாநேந ஸர்வாபாவஜ்ஞாநம்' (ஒன்றை அறிவதனல் 'மற்றொன்றும் இல்லை' என்பது அறிந்ததாகிவிடும்) என்றன்றோ சொல்லவேண்டும்? ஸர்வ என்பதற்கு ஸர்வாபாவ என்று அர்த்தமுண்டோ? ஒருகால், 'ஒரே வஸ்துதான் இருப்பது; மற்றவை இருப்பது போலத் தோன்றுவதெல்லாம் பொய்; அவை, அந்த ஒரு வஸ்துவின் ஸ்வபாவத்தைப் போன்ற ஸ்வபாவத்தையே உடைத்தாயிருக்கிறபடியால் அவை அதுவே' என்பதுதான் அந்த வாக்யத்திற்கு அர்த்தம் என்று சொன்னல், அப்பொழுது, இரண்டுக்கும் ஸ்வபாவம் ஒன்றாக இருக்கிறபடியால், ப்ரஹ்மம் போல ப்ரபஞ்சமும் ஸத்யமென்றாவது, அல்லது ப்ரபஞ்சம் போல ப்ரஹ்மம் பொய் என்றாவது ஒத்துக்கொள்ள வேண்டிவரும். அதுவும் பாதகமன்றோ ? ஒருகால், 'ஒருவனை ப்ரதாநன் என்று சென்னல் மற்றவர்களுக்கு அப்ராதாந்யம் தோற்றுவது போல, ஒன்று இருக்கின்றது என்று அறிவதனலேயே மற்றவை இல்லை என்று ஏற்படுகின்றது என்பதுதான் அதன் அர்த்தம் என்று சொல்லலாமோ?' என்றால், அப்பொழுது 'எல்லாம் அறிந்ததாகிவிடும்' என்னும் இடத்தில் 'எல்லாம் பொய் என்று அறிந்ததாகிவிடும்' என்று ஒரு வார்த்தை அத்யாஹாரம் செய்துகொள்ள வேண்டிவரும். அது அவ்வளவு ஸ்வரஸமன்று. தவிரவும், ஒன்று உண்மை என்னும் ஜ்ஞாநம், மற்றொன்று பொய் என்னும் ஜ்ஞாநம்; ஆகையால் அவைகளுக்கு வைரூப்யம் தோன்றும்; அதுவும் ஸ்வரஸமன்று 'ஒன்றை அறிவதனல் எல்லாம் அறிந்ததாகிவிடும்' என்னும் இடத்தில் ஜ்ஞாநங்களுக்கு ஸாரூப்யம் சொல்வதன்றோ ஸ்வரஸமாக இருக்கும்? 'அந்த ஸாரூப்யம் எப்படிச் சொல்லக்கூடும்?' என்று கேட்டால், 'ப்ரஹ்மம் என்பது ஒன்று, அதையே ஆத்மாவாக உடையது மற்றது (ப்ரபஞ்சம்)' என்று ஒத்துக்கொண்டு, ஒன்றை அறிந்த மாத்ரத்தாலே, அதையே ஆத்மாவாக உடைய மற்றதும் அறிந்ததாகிவிடும் என்று ஸமர்த்தித்தால், ஸாரூப்யம் சொன்னதாகிவிடும். அதாவது—'ஏகம்' என்பதும் 'ஸர்வம்' என்பதும் ஒரே விசேஷ்யத்தை அவகாஹிக்கின்றன; தர்மி ஒன்றாகையால் ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞை ஸமர்த்திதமாகி விடுகின்றது. இது தான் வாதத்தின் ப்ரக்ரியை.

ஆதிஶ்யதே(அ)நேநேத்யாதேஶ꞉। ஆதேஶ꞉—ப்ரஶாஸநம், "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத꞉" இத்யாதிபி⁴ரேகார்த்யாத்। ததா² ச மாநவம் வச꞉ "ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம்" இத்யாதி। அத்ராபி "ஏகமேவ" இதி ஜகது³பாதா³நதாம் ப்ரதிபாத்³ய "அத்³விதீய" பதே³நாதி⁴ஷ்டா²த்ரந்தரநிவாரணாத³ஸ்யைவாதி⁴ஷ்டா²த்ருத்வமபி ப்ரதிபாத்³யதே। அத꞉ "தம்

இனி, தமது அர்த்த ப்ரகாரம் உபநிஷத்தை விவரிக்கிறார், 'ஸ்வாயம்பு⁴வ꞉' இத்யாதியால். ஸ்வாயம்பு⁴வ꞉............ப்ரஷ்டவாநஸீதி - [இதன் அர்த்தம் - 'ஸ்தப்³தோ⁴(அ)ஸி, உத தமாதே³ஶமப்ராக்ஷ்ய꞉?' என்று ச்வேதகேதுவைப் பார்த்துச் சொல்லுகிறார். 'ஸ்தப்³தோ⁴(அ)ஸி' என்பதற்கு 'பரிபூர்ண இவ லக்ஷ்யஸே' (பரிபூர்ணன் போல அதாவது எல்லாம் அறிந்தவன் போலக் காணப்படுகிறாய்) என்று அர்த்தம் 'உத தமாதே³ஶமப்ராக்ஷ்ய꞉?' என்பதற்கு 'தாநாசார்யாந் ப்ரதி தமாதே³ஶம் ப்ருஷ்டவாநஸி' (அந்த ஆசார்யர்களிடத்தில் அந்த ஆதேசத்தைக் கேட்டாயோ?) என்று அர்த்தம்.] ச்ருதியில் 'தாநாசார்யாந் ப்ரதி' என்பதற்குப்பதங்கள் இல்லை, இது அர்த்தத்தால் கிடைக்கின்றது. 'தமாதே³ஶம்' என்பதில் 'அபி' என்னும் பதமும் ச்ருதியில் இல்லை; வ்யாக்யாநத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கேட்கிறவனுக்குத் துர்ப்பலமென்பதை அந்த 'அபி' சப்தம் குறிக்கின்றது.

இனி 'ஆதேஶ꞉' என்னும் சப்தத்தின் அர்த்தத்தை விசாரித்து, 'உத தமாதே³ஶமப்ராக்ஷ்ய꞉' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தின் கருத்தை விவரிக்கிறார். 'ஆ' என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய 'திஶ²' என்பதற்கு ப்ரசாஸநம் (அதாவது நியமனம்) என்பது அர்த்தம். அந்தத் தாதுவிலிருந்து, 'ஆதிஶ்யதே அநேந' என்று 'ஆதேஶ꞉' என்னும் சப்தம் வருகிறது. அதாவது - எவனால் நியமிக்கப்படுகிறதோ அவன் 'ஆதேசன்' என்று அர்த்தம். ப்ரஹ்மத்தினாலேயே இந்த ப்ரபஞ்சம் முழுவதும் நியமிக்கப்படுகிறபடியால், அந்த ப்ரஹ்மமே இவ்விடத்தில் 'ஆதேச' என்னும் சப்தத்தாற் சொல்லப்படுகிறது. ப்ருஹதாரண்யக உபநிஷத்திலும், 'ஏதஸ்ய வா' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தால் 'ப்ரஹ்மமே இந்த ப்ரபஞ்சத்தை நியமிக்கிறது' என்று சொல்லப்படுகிறது. (அந்த வாக்யத்தின் அர்த்தமாவது—கார்கியே! ஸூர்யன் சந்த்ரன் இவர்கள் இந்த ப்ரஹ்மத்தின் நியமநத்தில் தரிக்கப்பட்டவர்களாய் நிற்கிறார்கள்.) மநுஸ்ம்ருதியிலும், 'ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம்' (ஸகல வஸ்துக்களையும் நியமித்துவரும்) இத்யாதியான வாக்யம் காணப்படுகின்றது. இந்த உபநிஷத்திலும் 'ஏகமேவாத்³விதீயம்' என்னும் வாக்யத்தில் 'ஏகமேவ' என்பதால் 'ப்ரஹ்மமே ஜகத்திற்கு உபாதான காரணம்' என்பது முதலிற் சொல்லப்பட்டு, பிறகு 'அத்³விதீயம்' என்பதால் 'இந்த ப்ரபஞ்சத்தை நியமிக்கிறவன் வேறு ஒருவனும் இல்லை' என்று சொல்லப்படுகிறது. இப்படி இந்த ப்ரபஞ்சத்தின் நியமநம் ப்ரஹ்மத்திற்கே அஸாதாரணமான தர்மமாக ஏற்படுகிறபடியால், அந்த அஸாதாரண தர்மத்தை 'ஆதேஶ' என்னும் சப்பதத்தால் குறிப்

வேதாபஹார கு³ருபாதக தை³த்யபீடா³-
த்³யாபத்³விமோசந மஹிஷ்ட² ப²லப்ரதா³நை꞉ ।

கஸ்யாயுதேத்யாதி—விசித்ரசித³சித்ப்ரவிபா⁴கவ்ருத்தம் விஶ்வம் கஸ்யாயுதாயுதஶதைககலாம்ஶகாம்ஶே—சிதசித் விபாகத்தாலும் வர்த்திக்கிற இந்த ஜகத் விசித்ரமாய்க்கொண்டு, ஆருடைய ஸங்கல்ப ஸஹஸ்ராம்ஶ ஏகதேசத்தில் வர்த்திக்கிறது? விசித்ரமான அசித்தானது அத்யந்தம் பிந்நமான ஆகாசாதிகள். சேதந வைசித்ர்யமாகிறது கர்மத்தால் வந்த சதுர்வித சரீரங்களும், தத் போக்யாதிகளும். அம்சமென்று காலோபாதிகம் அல்பார்த்தத்திலே. "பாதோ³(அ)ஸ்ய விஶ்வா பூ⁴தாநி", "யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே", "[illegible]", "இத³ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி²தோ ஜக³த்" இத்யாதி.

(13) வேதாபஹாரேதி—இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே ப்ரஹ்ம ருத்ராதிகளுடைய க்ஷேத்ரஜ்ஞத்வத்தையும், பகவத் பரத்வத்தையும் அருளிச் செய்கிறார்.

வேதாபஹார—"யோ வை வேதா³ம்ஶ்ச" என்று ப்ரஹ்மாவுக்கு வேத சக்ஷுஸ்ஸைக் கொடுக்க, அது அஸுரர்களாலே அபஹ்ருதமாக, ப்ரஹ்மா வேதத்தை இழந்து துக்காந்தர் நிமக்நனான வளவிலே, விரோதிகளை அழியச் செய்து மீட்டுக்கொடுத்த உபகாரத்தைச் சொல்லுகிறது. ததோ ஹ்ருதேஷு வேதே³ஷு ப்³ரஹ்மாணம் கஶ்மலோ(அ)விஶத்। ததோ வாசம் ததீ³ஶாநம் ப்³ரஹ்மா வேதை³ர் விநாக்ருத꞉ ॥ ப்³ரஹ்மா—"வேதா³ மே பரமம் சக்ஷுர் வேதா³ மே பரமம் ப³லம்। வேதா³ மே பரமம் தா⁴ம வேதா³ மே ப்³ரஹ்ம சோத்தமம் ॥ அந்த⁴காரா ஹி மே ஜாதா லோகா வேதை³ர் விநாக்ருதா꞉ ॥ வேதா³ந்ருதே ஹி கிம் குர்யாம் லோகாநாம் ஸ்ருஷ்டிமுத்தமாம்। அஹோ ப³த மஹத்³து³꞉க²ம் வேத³நாஶநஜம் மம।" ஜஹார வேதா³நகி²லாந் ரஸாதலக³தாந் ஹரி꞉। ப்ராதா³ச்ச ப்³ரஹ்மணே ராஜந் தத꞉ ஸ்வாம் ப்ரக்ருதிம் யயௌ। ததஸ்ஸ யோக³யுக்தேந நாஶம் வேதா³பஹாரிணௌ ச। ஶோகாபநயநம் சக்ரே ப்³ரஹ்மண꞉ பரமேஷ்டி²ந꞉ ॥ இத்யாதி.

கு³ருபாதக:—ருத்ரன், லோககுருவும் பிதாவுமாயிருக்கிற ப்ரஹ்மாவைத் துர்மாநமே ஹேதுவாகத் தலையை அறுத்துப் பாதகியான பாதகத்தை

கோऽந்ய: ப்ரஜாபஸுபதீ பரிபாதி கஸ்ய
பாதோதகேந ஸ ஸிவ: ஸ்வஸிரோத்ருதேந ॥ 13

யும் போக்கி, தலையறுப்புண்ட ப்ரஹ்மாவையும் ஜீவிக்கும்படி பண்ணி ரக்ஷித்த படி. ஸ்ரீமாத்ஸ்யே ப்ருதிவீ...— தத: க்ரோதபரீதேந ஸம்ரக்த நயநேந ச । வாமாங்குஷ்ட நகாக்ரேண சிந்நம் தஸ்ய ஸிரோ மயா ॥ ப்ராஹ்மே— “ யஸ்மாத் அநபராதஸ்ய ஸிர ச்சிந்நம் த்வயா மம । தஸ்மாத் ஸாபஸமாவிஷ்ட: கபாலீ த்வம் பவிஷ்யஸி ।” ப்ரஹ்மஹா க்லேஸிதோ பூத்வா சரந் தீர்த்தாநி பூதலே । ததோऽஹம் கதவாந் தேவி ஹிமவந்தம் ஸிலோச்சயம் । தத்ர நாராயண: ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித: । ததஸ்தேந ஸ்வகம் பார்ஸ்வம் நகாக்ரேண விதாரிதம் । மஹதீ ஸ்ரவதீ தாரா தஸ்ய ரக்தஸ்ய நிஸ்ஸ்ருதா । விஷ்ணுப்ரஸாதாத் ஸுஸ்ரோணி கபாலம் தத் ஸஹஸ்ரதா । ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்தம் தநம் யதா ॥ ” இத்யாதி.

தைத்யபீடாத்யாபத்விமோசந— ஹிரண்ய ராவணாதிகளென்ன, த்ரிபுரத்திலே அஸுரர்களென்ன. ஆதி சப்தத்தாலே துர்வாஸ ஸாபாதிகளை நினைக்கிறது. இவர்களாலே தேவதைகளுக்கு வரும் ஆபத்தைப் போக்கி.

மஹிஷ்டபலப்ரதாநை:—க்ஷேத்ரஜ்ஞத்வேந ஸம்ப்ரதிபந்நரான அவர்களுக்கு ஸ்வஸமாராதநத்தாலே லோகமடங்க ஈஸ்வரனென்று கொண்டாடும்படியான பதங்களைக் கொடுத்தபடியாலே. “ யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: । புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஸுஸ்ரும ॥ ப்ரஹ்மாதய ஸுராஸ் ஸர்வே விஷ்ணுமாராத்ய தே புரா । ஸ்வம் ஸ்வம் பதமநுப்ராப்தா: கேஸவஸ்ய ப்ரஸாதத: । ஸநகாதயோ(?) ஸமஸ்தாநாம் ஆவஸ்தாநாம் அபி ஸர்வஸ: । மஹாதயங்கர: க்ருஷ்ண: ஸர்வலோகேஸ்வர: ப்ரபு: । ”

கோऽந்ய: பரிபாதி—ப்ரஜாபஸுபதிகளைத் தம்தம்மால் வந்த ஆபத்துக்களோடு பிறரால் வந்த ஆபத்துக்களோடு வாசியற ஸாகல்யேந ரக்ஷிக்கிறான் மற்றெவன்?

கஸ்ய....த்ருதேந—ஆருடைய திருவடிகளினின்றும் விழுந்த ஜலத்தை ஜடையிலே தரிக்கையாலே அந்த ருத்ரன் சிவனாயிற்று, சுத்தனாயிற்று? அவன்

கஸ்யோதரே ஹரவிரிஞ்சிமுக: ப்ரபஞ்ச:
கோ ரக்ஷதீமமஜநிஷ்ட ச கஸ்ய நாபே: ।
க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி த்வதந்ய:
க: கேந வைஷ பரவாநிதி ஸக்யஸங்க: ॥ 14

அசுத்தியை விளைத்துக்கொள்ளவும், அவனைச் சுத்தனுக்கும் பரம பாவநன் உன்னை யொழிய வேறு ஆர்தான்? - “ ப்ரஸீத மே ஸுரேஸாந ஹரே ஹத்யாஹராச்யுத । மயா ஹி த்வாம் ஸமாஸாத்ய நாதஸ்ய த்ரிலோசநே । க்ஷாலிதம் மயா ஹத்யா பாதப்ரக்ஷாலநே ரதம் । தத்ப்ரபாவிதம் த்ருஷ்ட்வா த்யாய ஸிரஸா ஹர: । பாவநாயாஸம் ஜடாமத்யே யோகேஸ்வரஸ்ய யோகாக்நே(?) த்வய்யாரணாக । வஸுதாயாஸ்தாம் அதோ பஹமூது ந பேதோ த்வயா ஹர: । ” சதுர்முக னித்யாதி - “ நலந்திகழ் சடையான் முடிக் கொன்றை மலரும் நாரணன் பாதத்துழாயும் கலந்திழிபுனல். ”

(14) கஸ்யோதரே—ப்ரமாணாநுகூலமான தர்க்க ரூப ந்யாயத்தாலே உத்தமான பரத்வத்தை நிகமிக்கிறார்.

கஸ்யோதரே ஹரவிரிஞ்சிமுக: ப்ரபஞ்ச:—ப்ரஹ்ம ருத்ர முகமான ஸகல பதார்த்தங்களும் மஹா ப்ரளயத்திலே ஆருடைய பக்கலிலே லயித்திருக்கின்றன? “ ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ” என்கிறபடியே த்விபரார்த்த காலம் நாமரூபங்களை இழந்து “ தம ஏகீபவதி ” என்கிறபடியே ஸர்வேஸ்வரன் பக்கலிலே கிடக்கிறபடி. “ ப்ரஹ்மாதிஷு ப்ரலீநேஷு நஷ்டே லோகே சராசரே । ஆபூதஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீநே ப்ரக்ருதௌ மஹாந் । ஏகஸ் திஷ்டதி விஸ்வாத்மா ஸ து நாராயண: ப்ரபு: ” இத்யாதி. ஸம்ஹாராதிகளிலே கர்மீபவிக்கு மிடத்தில் ப்ரஹ்மாதிகளோடு பிபீலிகாதிகளோடு வாசியில்லை என்கை.

கோ ரக்ஷதி— ஹர விரிஞ்சி முகமான ப்ரபஞ்சத்தை ரக்ஷிக்கிறார் ஆர்? “ ந ஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேஸ்வரம் ஹரிம் । ந ஸம்பவாம் ஸம்ஹாரே விபவாம் விநிவர்த்தநே । ”

அஜநிஷ்ட ச கஸ்ய நாபே:—மஹா ப்ரளயத்திலே அவிபக்தமாய்க் கிடக்கும் ப்ரபஞ்சம் யாருடைய குக்ஷியினின்றும் உத்பந்நமாயிற்று? மஹாபாரதே மோக்ஷதர்மே ஸப்தவ்யாஸே— “ ப்ரஜாபதிர் ஹ்யஸ்ய தேவஸ்ய பத்மம்

த்வாம் ஶீலரூபசரிதை: பரமப்ரக்ருஷ்ட
ஸத்வேந ஸாத்விகதயா ப்ரபலைஶ்ச ஶாஸ்த்ரை: |

ஸர்வயஜ்ஞஸமுத்பவம் | நாஹம் விதி:ப்ரமுகம் தஸ்ய தத்ராத்மஜ: விதா
தம: | '' ஸாத்விகபுராணே கௌஸ்துபே — "யத்தத்பத்மம் தத்தைவம்
தத்ர ப்ரஹ்மா வ்யஜாயத | ப்ரஹ்மணஶ்சாபி ஸம்பூத ஶிவ இத்யவதார்
யதாம் | ஶிவாத் ஸ்கந்த: ஸம்பபூவ ஸ்கந்தஸ்ருஷ்டிருதாஹ்ருதம் || '' இத்யாதி.

ஶீலம்—ப்ரஹ்மாதி ஸ்தாவராந்தமான எல்லார் தலைகளிலும் வைத்த
வன் ஆர்? திருவடியைத் தலையிலே வைத்தவனோ, திருவடியின் கீழே துகை
யுண்டவனோ ஈஶ்வரன்? என்கிறார். "ஸம்ஸ்ப்ருஶந் ஹஸ்தாப்யாம்" இத்யாதி.

ரூபம் ப்ரஸந்நப்ரதீக—அவாந்தர ப்ரளய விஷயம்.

சரிதை: க:—இப்படி ஸர்வ ப்ரகார ரக்ஷகர் உன்னையொழிய மற்றார்?

ஸத்வேந பரமப்ரக்ருஷ்டே:—இதராலே பாதந்த்ர மென்
றும் ஶக்யஶங்கமா யிருக்கிறதோ? "ஸதேவ ஸோம்ய ப்ரஹ்மாஸ்த
தே." வேறே சிலரை ஸம்ஶயிக்கைக்கு ஸம்பாவநையே இல்லை யென்கை.
ஒருவன் ஜநகனும் ஒருவன் ஜந்யனும், ஒருவன் ஶேஷியாய் ஒருவன் ஶேஷ
னும், ஒருவன் ஸ்ரிய:பதியாய் ஒருவன் உமாபதியாய், ஒருவன் புண்டரீகாக்ஷ
னும் ஒருவன் விரூபாக்ஷனும், ஒருவன் கருட வாஹநனும் ஒருவன் வ்ருஷப
வாஹநனும், ஒருவன் பாதகியாய் ஒருவன் ஶோதகனும், ஒருவன் புரு
ஷோத்தமனும் ஒருவன் புருஷனும், ஒருவன் சிரஸ்தித பாத பங்கஜனும்
ஒருவன் பாதபாம்ஸு மாத்ரமாய், ஒருவன் ஸூரித்ருஶ்யனும் ஒருவன்
வேதாள த்ருஶ்யனும், இப்படி தம: ப்ரகாஶங்கள் போலே, ருத்ரனுக்கும்
ஸர்வேஶ்வரனுக்கும் நெடுவாசி உண்டாகையாலே, ருத்ரனுக்கு அஸ்மதாதி
களோபாதி க்ஷேத்ரஜ்ஞதையாலே ஈஶ்வரத்வ ஶங்கையில்லை. ப்ரஹ்மா
வுக்கும் ஸமாந ந்யாயத்தாலே ஈஶ்வரத்வ ஶங்கையில்லை யென்றதாயிற்று.

(15.) த்வாம்ஶீலேதி—"நாவேக்ஷஸே" என்னும் ஶ்லோகத்தில்
வேதாந்த ப்ரதம பாதோக்த காரணத்வம் சொல்லுகிறது. "ஸ்வாபாவிக" என்
பதில் ருதீயபாதோக்த பாதார்த்தம் சொல்லுகிறது. "க:ஸ்ரீ:" என்பதில்
த்ரிபாதத்தில் அர்த்தம் சொல்லுகிறது. "வேதாபஹார" என்பதில்

ப்ரக்யாததைவபரமார்த்தவிதாம் மதைஶ்ச
நைவாஸுரப்ரக்ருதய: ப்ரபவந்தி போத்தும் || 15

உபப்ருஹ்மணமான அர்த்தம் சொல்லுகிறது. "கஸ்யாயுதாயுத" என்பதில்
ப்ரமாணநுக்ருஹீத தர்க்க ஸித்த பரத்வம் சொல்லுகிறது. இனி இதில்
இப்படி த்ருட ப்ரமாண ஸித்தமாயிருக்க, "ஜ்ஞாஸ்யந்தி யோ ந ஹி ஶாஸ்த்ரா:"
என்கிறபடியே ஆஸுர ப்ரக்ருதிகள் இவனை இழப்பதே! என்று அவர்கள்
இழவுக்கு இன்னாதாகிறார். அதவா, "யாருமோர் நிலைமையனென வறிவரிய
வெம்பெருமான்" என்று துஷ்ப்ரக்ருதிகள் கண்டடா தொழியப் பெறுவதே
இவ்விலக்ஷண விஷயம் என்றுமாம்.

த்வாம்—ஸர்வாதிகனுப் இவ்வாத்மாவுக்கு வகுத்த உன்னை.

ஶீல—"மஹதோ மந்தை:". "நாவேக்ஷஸே" என்கிற
ஶ்லோகத்தில் சொல்லுகிற ஸ்வபாவம். அதாகிறது ஸர்வாதிகனு
யிருந்துவைத்து, "பஹுதா ஸ்த்ரீம்" என்கிறபடியே இவற்றி னிழவு பேறு
தன்னதாய், அபிமாநியும் தானேயாய் இருக்கை.

ரூப—"க: புண்டரீகநயந:" என்கிற வடிவு. "ஹிரண்மய: புரு
ஷோ த்ருஶ்யதே," "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவ மக்ஷிணீ",
"நீலதோயதமத்யஸ்தா", "ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய
ஸாமாந்ய:" "ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதாஸ்திஸம்பவா".
இத்யாதி.

சரிதை:—ப்ரஹ்மா ஶிவ: ஶதமக: பரம: ஸ்வராட் என்றும், "வேதா
பஹார குருபாதக" என்றும் சொல்லுகிற அதிமாநுஷ சேஷ்டிதங்
களாலும்.

பரமப்ரக்ருஷ்டஸத்வேந— "பரமஸத்வஸமாஶ்ரய: க:" என்று
சுத்தஸத்வ மயமான விபூதியோகத்தாலும். "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே",
"தமஸ: பரஸ்தாத்", "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்விசக்ஷணம்"
இத்யாதி.

ஸாத்விகதயா ப்ரபலைஶ்ச ஶாஸ்த்ரை:—வேதத்தில் ஸாத்விகருக்கு
ஹிதாநுஶாஸநம் பண்ணும் ஜ்ஞாந பாகத்தாலும், "அக்நே ஶிவஸ்ய
மாஹாத்ம்யம்" உதாஹ்ருதம், "ஸாத்விகேஷு கல்பேஷு மாஹாத்ம்ய மதிகம்

உ.ழுூவித த்ரிவிய லிச் ஸோதிஶாயி
ஸம்ஹாவநம் தவ வரிஷ்ர விஶஷ்வாவம் ।
————ஶாயாவலெந ஹவதாஉவி நிமஒஷ்யோநம்
வஶூஷ்தி கெதிநிஶம் கூவநநயஹாவா: ॥ 16

ஹலெ: ” என்று ஸ்ரீமாத்ஸ்ய புராணத்திலே ஸத்வோத்ரிக்தனை ப்ரஹ்மாவின் வாக்ய மாகையாலே ப்ரபலமான ஶாஸ்த்ரங்களாலும்.

ஃ்ரவழாதலைவவாரோயஉவிஓாம் ஊதைஸ்ஷ—ப்ரக்யாதமான தைவத்தினுடைய யதார்த்தவித்துக்களுடைய மதங்களாலும். ஸ்ருஷ்டிவாக்யம், நாராயணநுவாகம், ஸுபாலோபநிஷத், அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளிலே ஸர்வாதிகனை ப்ரஸித்தனாய் இருக்கை.

ஊவம்விஶிஷ்டம் கூாம் சூவஷரவ்ரகூதய: பொஉவெவ ந வ்ரஹவஜீ—“ சூவஷஶிம்யொநிஶாவநா: ” இத்யாதி.

(16.) “ உஹாதாநவெ ஶாழ ” இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே உன்னைப் பெறும் ஸத்ப்ரக்ருதிகள் காணப்பெறுவதே என்றும், “யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்” என்று அது தன் பேறென்றிருக்கிறார்.

உஷ்ம்விதைதூதி—த்ரிவித பரிச்சேத ரஹிதமாய், ஸமாதிக ஸம்பாவனையும் கடந்துள்ள உன்னுடைய ப்ரபுத்வத்தை. விஹவுாஷெஶவரிஜெ உரஹித:, நிதூவாக காருவரிஜெஊரஹித:, ஸவஉவ்ரகாரிவெந வ்ரயூகதியொமழவஷஜாஹாவாக வஷ்வரிஜெஉரஹித:, ஸஉழகவஜூாஹாவாக தவூயா வ்ரஷாதிநா வா வரிஜெஉாஹித உதி வா. கூத ஊவ ஸோயிகஉரி உர:.

ஶாயாவலெந—பகவத் ஸ்வரூபத்தை மறைக்கும் ப்ரக்ருதி பலத்தாலே என்னுதல், திவ்ய விக்ரஹத்தை இதர ஸஜாதீயமாக்கும் ஆஶ்சர்ய ஶக்தி யோகத்தாலே என்னுதல்.

ஹவதாஉவி நிமஒஷ்யோநம்—“ கூதாநம் ஶாஷம் ஒதெ ”, “ அஹம் வொ பாஷவொ ஜாத: ” என்றும் ஆட்பார்த்துழிதரு முன்னாலே மறைக்கப்பட்டதே ஆகிலும்.

யஃண் ஊணாஜர மொஅரம் அ ய
ஊமொதரா ணூாவஷணாநி யாநிஅ ।
மூணா: வ்ரயாநம் வஶஷ: வரம் வஃம்
வராதூரம் வெஹு அ தெ விஹூதய: 17

வஶூஷ்தி கெதிநிஶம்—ஸத் ப்ரக்ருதிகளாயிருப்பார் சில மஹாத்மாக்கள் ஸர்வ காலமுள்ளபடி காணுகின்றார்கள்.

கூவநநயஹாவா:— உன்னை யொழிய வேறு நினைவில்லாதவர்கள் என்னுதல்; உன்னையொழிய உபாயாந்தரம் அறியாதவர்கள் என்னுதல் ; இப்படிகளாலே ஜ்ஞாநத்துக்கு உன்னையொழிய விஷயாந்தரம் இல்லாதவர்கள் என்னுதல்.

(17.) கீழ் ப்ரதிபாதித்த ஸர்வேஶ்வரத்வத்துக்கு ப்ரதிஸம்பந்திதயா அபேக்ஷிதமான ஈஶிதவ்ய ஜாதத்தை ப்ரபஞ்சீகரிக்கிறார்.

யஃணம்—சதுர்த்தச புவநாத்மகமான அண்டம் ஒன்றாக. “அணாநாஜ ஸஹஸ்ராணாம்” இத்யாதிகளில் படியே அண்ட ஸமூஹம் யாதொன்று.

அணாஜர மொஅரம் அ யக—அண்டாதிப த்ரிலோகேஶ்வர திக்பால நரபதி ப்ரமுகமாய், ஸ்தாவர ஜங்கமாத்மகமான அண்டாந்தர்வர்த்தி ஸமூஹம் யாதொன்று.

ஊமொதராணி—மேன்மேலும் தச குணிதமான வாரி வஹ்நி அநில ஆகாஶங்களும், பூதாதிகளும், மஹானும், கார்யோந்முகமான ப்ரக்ருத்யம்சமான ஆவரணங்கள் இவை சில.

மூணா:—அது சேதநரைப் பந்திப்பது குணத்வாரா ஆகையாலே, பந்தகாரணமான ஸத்வாதிகள்.

வ்ரயாநம்—அவிக்ருத ப்ரக்ருதி ப்ரதேசம். ‘மூணா: வ்ரயாநம்’ என்று குண குணிகளைப் பிரித்துப் பேசுகிறது, குணங்களையே ஜகத் காரணமாகச் சொன்ன ஸாங்க்ய மதம் அவைதிகம் என்கைக்காக.

வஶஷ:— பஜாதஶஷி:. அண்டாந்தர கோசரமென்று வ்யஷ்டியைச் சொல்லுகையாலே இது ஸமஷ்டி விஷயம்.

வரம் வஃம்—காயஉ காரண உஹயாவஷ வ்ரகூதூாஶயாக வெஷதுஜாக சூநடாக வரம் வஃம். “ ஹிரண்யெ வஶெ ஜொகெ ” உதூாஹூ “ ஜெழாதிஷாம் ஜெழாதி ஹுஃஷாதவிஜொ விஃ: ”, “ வரெஉ ஜெழாஶ ”

வஶீ வதாந்யோ குணவாந் ருஜு: ஶுசி:
ம்ருதுர் தயாளுர் மதுர: ஸ்திர: ஸம: ।

“ வொஸ்ரூதெ ” “ த்ரிவாதஸ்யாம்ருதம் திவி,” “ யத்ர பூர்வெ ஸாத்யா: ஸந்தி தெவா: ” “ அத்யகாரந்யுக்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோ: உஹார் த்தந: ” “ ஸ்வெய வ்ருஹயா ஸாஜந் த்ரைலோக்யம் தெவதாநவை: । தத்ர மக்யா வாந தெஹம் ஞொக ஊயாந்தி ஹாஸத ” இத்யாதிஹி ஸாத்ரீ வாதிஹதி:

வஸாத்ரூ ஸ:—ப்ரஹ்மாதிகளில் பரர் முக்தர், அவர்களில் பரர் நித்ய ஸித்தர்.

ஶ்ரூஹ அ—சுத்த ஸத்வ மயமாய், ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி கல்யாண குணோபேதமாய், ப்ருஹத்வ ப்ருஹ்மணத்வ குணயோகத்தாலே ப்ரஹ்ம சப்த வாச்யமான திவ்ய விக்ரஹம். “ ஸ வர ஸ்வஶக்தீநாம் ஶ்ரூஹண: ஸஉநஞஸ: ” “ ஶாஞாநஞ ஊஹாவிஹதி வரஉம ஶ்ரூஹஸதவம் ஹரெ ஊஹதம் ஶ்ரூஹ ததொவி தத்ர்யதஸம் ஸதவம் யடிதூஹ்ம்தம் ”
இத்யாதி.

தெ விஹதய:—விபூதிசரீர சப்தங்கள் பர்யாய மாகையாலே சரீரதுயா பேஷங்கள். “ விஹதயொ ஹரெ ரெதா ஜமத ஸ்ரஷ்டு ஹெதவ: । யாநி ஊஹஜாநஉஹஜாநி யாநத்ராநத்ரவா க்ஷிக ॥ ஸந்தி வெ வஸ்தூ ஜாதாநி தாநி ஸவாணி தஆவா: । ” “ தத்ஸவம் வெ ஹரெ ஸ்தந: ” இத்யாதிஹி விஹதி ஶரீர ஶப்தயொ: பயாயகவும் ஶாஸ்த்ரஷ வ்ரவிஸம்.

(18.) கீழ் ஶரண்யனுடைய உத்கர்ஷம் சொல்லி, இதில் உபய விபூதி நாதனை நம்மால் கிட்டலாமோ வென்று கூசாதபடி, ஆச்ரிதருக்கு இழியுந் துறையான கல்யாண குணங்களிலே பன்னிரண்டு குணங்களை அருளிச்செய்கிறார். அதவா, கீழ் ஸர்வேஶ்வரத்வம் சொல்லிற்றாய், இனிச் சொல்ல ப்ராப்தமான ஸமஸ்த கல்யாண குணாத்மகதையை அருளிச்செய்கிறார் என்றுமாம்.

வஶீ—கீழ்ச்சொன்ன ஈஶிதவ்யதையைத் தன் வசத்திலே நடத்தி வர்த்திக்கு மென்கை. இத்தாலும் ஸ்வதந்த்ரன் பக்கலிலே குணக்கிடந்தாவது பெருவிலையறு மென்னுமிடம் சொல்லுகிறது. “ ஸவஸ்ய வஶீ ஸவஸ்யெஶாந:”, “ஜமவஶெ வதஸதெஷ”. அதவா, தன்னுடைய திருவடிகளிலே

186769

30.	,,	வி. கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்ரீரங்கம்	3	0	0
31.	,,	ஜி. சௌந்தரராஜய்யங்கார் உர்காம்	3	0	0
32.	,,	ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ராஜாமடம்	3	0	0
33.	,,	கிருஷ்ண அய்யங்கார் சாத்தாங்குளம்	3	0	0
34.	,,	டி. கோதண்டராம அய்யங்கார் தஞ்சாவூர்	5	0	0
35	,,	வி. வ்ஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் எலமனூர்	3	0	0
36.	,,	சாமி ராஜய்யங்கார் புதுப்பாளையம்	3	0	0
37.	,,	கே. வி. வி. எஸ். அனந்ததேசிகாச்சாரியார் புதுச்சேரி	3	0	0
38.	,,	எருக்காட்டூர் ராமானுஜாச்சாரியார் மைலாப்பூர்	3	0	0
39.	,,	வி. கோபாலஸாமி அய்யங்கார் பங்களூர்	3	0	0
40.	,,	டி. ராஜகோபாலாச்சாரியார் நெல்லூர்	3	0	0
41.	,,	கே. சக்கரபாணி அய்யங்கார் கோயம்புத்தூர்	3	0	0
42.	,,	ஆர். கிருஷ்ண சாஸ்திரிகள் திருத்துரைப்பூண்டி	3	0	0
43.	,,	கே. ஜி. வெங்கடவரதாச்சாரியார் ஜிஞ்ஜீ	3	0	0
44	,,	வி. கே. பொன்னுசாமி அய்யங்கார் திருச்சி	3	0	0
45.	,,	வேதாந்த ராமானுஜாச்சாரியார் ஆரியக்குடி	3	0	0
46.	,,	டி. ராஜகோபால அய்யங்கார் குழித்தலை	3	0	0
47.	,,	டி. கிருஷ்ணசாமி அய்யங்கார் (ராவ்சாகிப்) திருவல்லிக்கேணி	3	0	0
48.	,,	வி. ஆராமுத அய்யங்கார் கபிஸ்தலம்	3	0	0
49.	,,	எஸ். வீரராகவாச்சாரியார் வடுவூர்	3	0	0
50.	,,	வி. B. நயினாசார் திருபத்திபுரம்	3	0	0
51.	,,	பி. D. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் எழும்பூர்	1	8	0
52	,,	எ. வரதாச்சாரியர் நுங்கம்பாக்கம்	3	0	0
53.	,,	D. ராமசாமி அய்யங்கார் கடம்பூர்	3	0	0
54.	,,	பி. என் வடமலைராஜஸ்திரி பிக்ஷாண்டார் கோவில்	3	0	0
55.	,,	கே. வி. ராமசாமி ராஜா திருவிடந்தை	3	0	0
56.	,,	வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அம்பாசமுத்திரம்	3	0	0
57.	,,	எ. செஷாச்சாரியர் சிந்தாத்தரிப்பேட்டை	3	0	0
58.	,,	எம். வெங்கிடாச்சார்யார் திருவல்லிக்கேணி	1	8	0
		சில்லரை வந்தது முதல் வரவு	4	10	6
		ஆக மொத்தம் ரூ.	381	4	6

22—2—27. } கே. டி. ஸௌந்தரராஜாசாரி,
உதவி காரிய

பாதி விலை ! **ஒரு மாதம் வரை** பாதி விலை !!



அசல் **விலை** ரூ. **14.**

பாதி **விலை** ரூ. **7.**

22-காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம். 10 வருஷம் உத்திர வாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

☛ ஸ்வான் ஹவுஸ், தபால் பெட்டி, நெ 508,
பி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!



இச்சமயம் தவறாதீர்கள் !!

சிலநாளைக்கு மாத்திரம் !!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாரா லீவர் லைக்கட் லீவர் கடியாரம் விலை ரூ. **5-0-0** உள்ளது. உள் டையலின்மேல் ஐந்துவருஷம் உத்திரவாதம். காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" லைடப்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும். இச்சமயம் தவறாதீர்கள். சில நாளைக்கு மாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. **5-0-0** முந்துங்கள்.

விலாசம்.—காப்டன் வாச் கம்பெனி,
தபால்பெட்டி 265 மதராஸ்.

சென்னை, சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த சபை காரியதரிசியால் வெளியிடப்படுவது.